விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 30 புதன் கிழமை (16.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# 80 சிங்களக் குடும்பங்கள் நாவற்குழிக்கு அழைப்பு

## காணிகளை பகிர்ந்தளிக்கிறது வீடமைப்பு அதிகாரசபை





(யாழ்ப்பாணம்)

நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை சிங்களக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கென அனுராதபுரத்திலிருந்து 80 குடும்பங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான காணிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் பகிர்ந்தளிக்க வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த இரகசிய ஏற்பாடு?

(கொழும்பு)

வடக்கில் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்த இரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் நோக்கில் மாவீரர்தின நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான இரகசிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி தேராவில் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லமொன்றில் எதிர்வரும் நவம்பர் மாதம் 27-ம் திகதி மாவீரர்தின நிகழ்வு 19-ம் பக்கம் பார்க்க

## அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் இன மோதலையே ஏற்படுத்தும்!



### தவிசாளர் சிவஞானம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் ஒருமுறை இனமோதலையும் முறுகலையும் ஏற்படுத்த கூடிய அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபையின் தவசாளரும் இலங்கைத்தமிழரசுக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளருமான சீ.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்நாவற்குழிப் பகுதியில் நேற்றைய 20-ம் பக்கம் பார்க்க




## பிரதமர் மன்மோகன் வேண்டுகோள் போராட்டத்தை முடித்தார் தியாகு



(சென்னை)

பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 9 கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நிலைப் போராட்டத்தினை நடத்திய தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தியாகு தனது போராட்டத்தை முடித்துக் கொண்டுள்ளார்.

14 நாட்களாக இந்த உண்ணாவிரதப் போராட் 20-ம் பக்கம் பார்க்க

## 37 இந்.மீனவர்கள் இலங்கையில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடகடலில் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித்த 37 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்திருக்கின்றார்.

வடமேற்குக் கடற்பரப்பாகிய தலைமன்னார் கடற்பரப்பில் 4 படகுகளில் வந்திருந்த 22 இந்திய மீனவர்களும், நெடுந்தீவு கடற்பரப்பில் 3 படகுகளில் வந்திருந்த 15 இந்திய மீனவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றனர். கைது செய்யப்பட்டுள்ளவர்கள் இராமேஸ் 19-ம் பக்கம் பார்க்க

## நாட்டுக்கு எதிராக செயற்பட்டால் அதனைத் தடுக்க இராணுவம் தயார்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

எமது இராணுவம் மிகுந்த அர்ப்பணிப்புள்ளவர்கள் என்பதுடன் அவர்கள் எமது நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெற்றால் அதனைத் தடுப்பதற்கு எப்போதும் தயாராகவே உள்ளனர் என இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை வவுனியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட இராணுவத் தளபதி, வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இராணுவ வீரர்களுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், 20-ம் பக்கம் பார்க்க

## சீனக் குழுவினருடன் ஜனாதிபதி பேச்சு

(கொழும்பு)

சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான இரு தரப்பு உறவினை வலுப்படுத்தும் நோக்கில் நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சமாதானம் மற்றும் நிராயுத மக்கள் சங்கத்தின் உப தலைவரும் தேசிய மக்கள் காங்கிரஸின் உப தலைவருமான யங் ஜூன்கி சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது, ஜனாதிபதி தலைமை 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மின்சாரம் தடைப்படும்

உப மின்நிலையங்களை நிறுவுதல் மற்றும் கட்டமைப்பு இணைப்பு வேலைகள், பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கலிகை பிரதேசத்தின் ஒரு பகுதி, யாக்கரு பிரதேசம், அந்தணந்திடல் ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கொடிகாமம் பிரதேசத்தின் ஒரு பகுதி, உசன், மிருசுவில், கெற்பலி, சுன்னாகம், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், ஆனைக் கோட்டை, நவாலி, இணுவில், கோண்டாவில், கொக்குவில், நாச்சிமார்கோவிலடி, பூநாரிமரத்தடி, கோம்பயன்மணல் பிரதேசம், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

மறுநாள் சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரை நகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை உரும்பிராய், மருத்துவ பீடப் பிரதேசம், கொக்குவில் பிரதேசம், பூநாரி மரத்தடி, கோம்பயன்மணல் பிரதேசம், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, குருநகர், பாசையூர், முஸ்லிம் கல்லூரி வீதி, பொம்மைவெளிப் பிரதேசம், ஆறுகால்மடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## தவறிவிட்டது

590733059 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன அனுமதிப் பத்திரம் என்பன இணுவில் – மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0770800514 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தரவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4190)



## மணிவிழா வாழ்த்துக்கள்

திரு.ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி



வாழ்த்துபவர்கள்:

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம்,

சுதுமலை நாவலர் பாடசாலை (4187)



## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

☆ நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

☆ இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

☆ எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அதிர்ஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

☆ மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

☆ இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தை பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:

### சிவா நறுமணப் பூங்கா

இல. 288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திர சந்திக்கு அருகில்) தொ.பேசி. : 021 222 2567 (சி5183)


## மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அறிவித்தல்

மயிலிட்டித்துறை கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் கிராம சேவையாளர் பிரிவு (ஜே/251, ஜே/248)-ம் எதிர்வரும் 31.10.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம். தவறாது இரு கிராம சேவகர் பிரிவு மக்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். வாகன ஒழுங்கு எமது மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்தில் இருந்து நடைபெறும்.

தகவல்:
மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும்
மீள்குடியேற்றக் குழுவும்
(4183)

## திருச்சி முகாமில் மோதல் இலங்கையர் கைது

தமிழகத்தின் திருச்சியில் சிறப்பு அகதிகள் முகாம் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் இலங்கை அகதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறையில் கைதிகளுக்குள் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக ஒருவருக்கு மண்டை ஓடு உடைந்துள்ளது.

இலங்கை அகதிகளை தடுத்துவைத்து கண்காணிக்க திருச்சி மத்திய சிறை வளாகத்தில் சிறப்பு முகாம் சிறை நிறுவப்பட்டுள்ளது.

இதில் அடைக்கப்பட்டுள்ள நிர்மல் ஆனந்த் (வயது 30) மற்றும் இலங்கநாதன் (வயது 32) ஆகியோருக்கு இடையே நிதிகொடுக்கல் வாங்கல் தொடர்பாக முறுகல் ஏற்பட்டு, அது கைகலப்பில் முடிந்தது.

இருவருக்கும் நடந்த சண்டையில், நிர்மல்குமாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

தகவலறிந்த சிறைச்சாலை பொலிஸார், நிர்மல்குமாரை மீட்டு, சிறை வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதுகுறித்து கே.கே.நகர் பொலிஸார் வழக்கு பதிவு செய்து, இலங்கநாதனை கைது செய்தனர். (எ-11)

## எயிட்ஸ் தொற்று பரவல் அதிகரிப்பு

நாட்டில் எயிட்ஸ் நோய்த் தொற்று பரவும் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணிகளை கண்டறிய விசேட குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.


நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் என்பனவற்றை அறியத்தருமாறு இந்தக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

தாயிடமிருந்து பிள்ளைக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று பரவக்கூடிய சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே கர்ப்பிணிப் பெண்களுக்கான இரத்த பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-11)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு
13 . 03 . 1990



அநியாய அழிப்பு
02 . 09 . 2013

### அமரர் ரவிந்திரராசா பிறிட்மன்

தாங்க முடியவில்லை ஐயா! உன் மறைவை
ஏங்கி அழுகின்றோம்! எம் கண்ணீர் சொரிய
சடுதியாய் வந்தானோ காலன் பஸ்ஸில்!
உயிர் இருந்தும் நாம் ஊனமாகி விட்டோம்


16.10.2013 இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (சி-5197)

- குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### நாகர் கந்தையா



சண்டிலிப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கந்தையா 15.10.2013 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் முத்துப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கனகமணி, கனகரத்தினம், தவமணி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் கலைவாணி (ஜேர்மன்), ஜெசீதன் (பிரதேச செயலகம், சங்கானை), ஜெயாகரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதராஜன்(ஜேர்மன்), ரஜிதமதி (பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிஸ்வினின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.10.2013 (புதன்கிழமை) இன்று அவரது இல்லத்தில் இடம்பெற்று உடற்தகனத்திற்காக முற்பகல் 10 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 790 6331

(4188)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சரியான முடிவு எடுப்பது எப்படி

மற்றவர்களுக்கு குல்லா போட்டே நம்மில் பெரும்பாலானோர் பழக்கப்பட்டுவிட்டோம். அவ்வாறு செய்தால் தான் நாம் முன்னேற முடியும் என்று நம்பி ஏமாறுகிறோம்.

ஆனால் முன்னேறத் துடிப்பவர்கள் தமக்குத் தாமே தொப்பி அணிந்து கொள்ள வேண்டும் என்கிறார் ஓர் அறிஞர்.

"சரியான முடிவு எடுப்பதற்கு ஆறு கற்பனைத் தொப்பிகள் அவசியம்'' என்கிறார் எட்வேர்ட் டி.பேனா. இது அவருடைய பிரபலமான ஒரு கருத்து ஆகும்.

"Lateral Thinking" என்பது சிந்தனையிலே புதிய வகையான சிந்தனையாகும். அந்த வார்த்தையை உருவாக்கியதே அவர் தான்.

நாம் நமது வாழ்க்கையில் சரியான முடிவுகள் எடுப்பதற்கு அவருடைய இந்தக் கருத்து மிகவும் உபயோகமாக இருக்கும்.

முக்கியமான முடிவுகளை எடுக்கும் போதெல்லாம் இந்தக் கற்பனைத் தொப்பிகள் ஆறினையும் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அணிந்து கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

**முதலில் வெள்ளைத் தொப்பி**– முடிவெடுப்பதற்கு முதல் தேவை சரியான தகவல்கள். தகவல்களைத் திரட்டுவது தான் வெள்ளைத் தொப்பி அணிவதன் நோக்கம்.

**இரண்டாவது, பச்சைத் தொப்பி**– இது கற்பனை சக்தியைக் குறிக்கிறது. இந்தத் தொப்பி கிடைத்த தகவல்களை வைத்துப் புதுப்புது யோசனைகளை உற்பத்தி செய்யத் தூண்டுகிறது.

**மூன்றாவது, மஞ்சள் தொப்பி**– இதன் வேலை என்னவென்றால், பச்சைத் தொப்பி கொடுத்த யோசனைகளில் எது நடைமுறைக்குச் சரிப்பட்டு வரும். எது சரிப்பட்டு வராது என்பதை சரியாக இனம் கண்டு மற்ற யோசனைகளையெல்லாம் வடிகட்டிவிடும்.

**நான்காவது, கறுப்புத் தொப்பி**– இது நியாய தர்மங்களைப் பாதுகாக்கும் தொப்பி, நடக்கக் கூடிய, நமக்கு மட்டும் நன்மை தரக்கூடிய சுயநலமான யோசனையாக இருந்தால் ''இது சமூகத்துக்குக் கேடானது. ஆபத்து நிறைந்தது'' என்று இந்தத் தொப்பி எச்சரிக்கும்.

**ஐந்தாவது, சிவப்புத் தொப்பி**– இந்தத் தொப்பிக்கு தக்க அறிவு, தகவல் அறிவு பற்றியெல்லாம் தெரியாது. "ஏதோ என் மனதிற்குப்படுகிறது... இது சரியாக வரும்" என்று சொல்வோம் அல்லவா? இந்த உள்ளுணர்வு (Intuition) தான் சிவப்புத் தொப்பி.

**ஆறாவது, நீலத் தொப்பி**– மற்ற ஐந்து தொப்பிகள் எடுத்து வைத்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்து சரியான, தெளிவான இறுதி முடிவு எடுக்கும் தொப்பி இது.

இது தான் எட்வேர்ட் டி பேனா கூறும் கருத்து. இதைச் சுருக்கமாகப் புரிந்துகொள்வது எப்படி?

இப்போது ஏதோ ஒரு விடயத்துக்காக நாம் முடிவெடுக்க வேண்டும் என்று வைத்துக் கொள்வோம்.

முதலில் அது சம்பந்தப்பட்ட தகவல்களைத் திரட்ட வேண்டும். அந்தத் தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு புது யோசனைகளை உருவாக்க வேண்டும். இதில் உபயோகப்படாத யோசனைகளைக் கூட ஆராய வேண்டும்.

ஒரு விடயம் நமக்கு நல்லது என்று தோன்றினாலும் அதனால் மற்றவர்களுக்கு ஏதும் இடையூறு இருக்குமா? என்று சிந்திக்க வேண்டும்.

அதன்பின் நம் உள்ளுணர்வு என்ன சொல்கிறது என்று பார்க்கவேண்டும். கடைசியாக எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரு நல்ல, தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும்.

இதுதான் எட்வேர்ட் டி.பேனா சொல்லும் ஆறு வகையான சிந்தனைத் தொப்பிகள்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் சில சந்தர்ப்பங்களில் இப்படி வரிசையாகப் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

உடனடியாக முடிவெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக, காற்பந்தாட்டத்தில் பந்தை உதைப்பதா? அல்லது தடுப்பதா? என்பது போன்ற நேரங்களில் சிவப்புத் தொப்பிதான் சரியானது.

அதாவது உள்ளுணர்வு. அது கூர்மையாக இருக்க வேண்டும். அதற்கு மனம் தெளிவாக இருப்பது மிக மிக அவசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# குருதி சிந்திய இளைஞர்களின் கனவுகளை எதிர்கால சந்ததிக்கு உணர்த்த வேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சர் த.குருகுலராஜா

கடந்த 30 ஆண்டு காலத்திலும் குருதி சிந்திய இளைஞர்களின் கனவுகளையும் காயம் என்றால் என்ன என்பதனையும் எதிர்கால சந்ததிக்கு உணர்த்த வேண்டும் என வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

செம்மணி வீதியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பதவியேற்றுக் கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாடோடிகளாக திரிந்து பின் கூடி வாழ்ந்து எமக்கென்று தனியடையாளத்துடன் ஈழத் தமிழர் என்ற பெயரைப் பெற பல நூற்றாண்டுகள் நாம் எமது மண்ணிலே வாழ்ந்து கடல் கடந்த நாடுகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி எமது கல்வி, கலை, பண்பாடு, வாழ்வியல் கோலங்களை மற்றையவர்கள் அறியும்படி இப் பூவுலகில் தமிழர்களாக வாழ்ந்து காட்டியுள்ளோம்.

பள்ளிக் கல்வியிலே மகுட நிலையில் இருந்த எமது மாநிலம் இன்று எல்லோர் உதட்டிலும் மலினமாகப் பேசப்படும் பொருளாக மாறியுள்ளது.

பள்ளிகளின் அலங்கார அபிவிருத்தி, மாணவர்களின் பண்பாட்டு நிலையறியாப் போக்கு, பெற்றோர்களின் போட்டி மனப்பாங்கு, எமது சமூகத்தின் விழிப்பற்ற கண்ணோட்டம், நண்பர்களின் அட்டகாசம், கல்வியியலாளர்களின் குறுகிய வெளிப்படையற்ற ஆசிரியர்கள் தனியாள் அபிவிருத்தி மோகம், அதிபர்களின் மேலாண்மை, அரசியல் வாதி களின் அதிரடி ஆதிக்கம் இவை யாவும் ஒன்று சேர்ந்து எமது கல்விப் புலத்தின் வளர்ச்சிக் குறைவுக்கு உரமூட்டியுள்ளன.

கல்வியின் உச்சம் வடகிழக்கின் சுபீட்சம் என்றும் கல்வியின் தாக்கம் வட கிழக்கின் மீட்சியின் சின்னமாக மாறவேண்டும் என்பதே எனது சிறிய விருப்பாகும்.

காசு, பணம், பொருளாதாரக் குறைபாடு, தொழில் இன்மை, குடிசை வாழ்வு, மறுவேளை சோற்றுக்கு கெஞ்சி நிற்கும் உடல், பள்ளி செல்லாப்பிள்ளைகள், மதிப்பெண்கள் பெற முடியாமல் தவிக்கும் பிள்ளைகள், கற்கும் வழி தெரியாமல் திணறும் பிள்ளைகள்.

படித்தும் பலன் என்ன? வேலை எங்கே என்று ஏங்கும் இளசுகள், பெற்றோரின் சேமிப்பை கரைத்திடும் துடிப்பான இளைஞர்கள், ஏமாற்றப்படும் காதல்யுவதிகள், தமிழர் பண்பாட்டை அறிந்தும் அதனை பொருட்படுத்தாத இளைஞர் குழுக்கள், இவர்களுக்கு தாயகம் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? நான் பேசும் மொழி இனி எப்படிப் பேசப்படும்? என் முன்னே இருந்த கடந்த முப்பதாண்டு குருதி சிந்திய இளைஞர்களின் வாழ்வு, அவர்களை தாங்கி நிற்கும் குடும்ப உறவுகள், நசுக்கப்படும் எமது உணர்வுகள், சிந்தனைகள், இவற்றையெல்லாம் எனது சிந்தனையின் பால் ஊடுருவ வேண்டிய பதவியையே இன்று நான் ஏற்றுள்ளேன்.

எதற்குமோர் அளவுண்டு. எந்நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதனை எம் இனிய மொழியை தம் தாய் மொழியாகக் கொண்டவர்களில் சிலர் பலவேளைகளில் மறந்து போகின்றார்கள். எங்கே தராசில் நிறையுண்டோ அப்பக்கம் சாய்கின்றார்கள். இவர்களால் முழு இறைமையும் கொண்ட எம் மக்கள் ஊசலாடுகின்றார்கள்.

மற்றவர்களின் அழுத்தங்கள், உயர் அதிகாரத் திணிப்புக்கள் ஆகியவற்றை மறந்து விடுங்கள்.

உன்னால் முடிந்தால் செய் அல்லது செத்துமடி என்ற வாக்கினை உங்கள் மனக்கண்முன் தினமும் வையுங்கள். எமது பூமி சுதந்திரக் காற்றை உள்ளேயும் வெளியேயும் இழுத்துவிட நீங்கள் தயாராகுங்கள்.

எமது கண்முன் கல்வியே கண், கல்வியே மூச்சு, கல்வியே எனது வீச்சு என்பதை மனதில் ஏற்றி யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற தமிழ் குடியின் மேன்மை வாக்கை எமது குழந்தைகள் யாவரும் உச்சரிக்க உங்கள் பணிகளை ஆற்றும்படி கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 100-120 | 120 |
| பச்சைமிளகாய் | 110 | 70 | 120 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 60 |
| கோவா | 40 | 60 | 80 |
| கரட் | 40 | 40 | 100 |
| பூசணி | 25 | 30 | 50 |
| புடோல் | 40 | 60 | 80 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 120-180 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 90 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 70 |
| பயற்றங்காய் | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 15 | 15 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 160 |
| போஞ்சி | — | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 30 |
| தேசிக்காய் | 450 | 350 | 50 |
| தேங்காய் ஒன்று | 60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | — | 90 | 120 |

# இராசி பலன்

*16.10.2013*
*(புரட்டாதி 30, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*
*துவாதசி முற்பகல் 8.20 மணிவரை*
*பூரட்டாதி பின்னிரவு 3.21 மணிவரை*
*இராகுகாலம் 12.02-1.32 மணிவரை*
*சுபநேரம் 4.32-6.02 மணிவரை*
*கடையிற் சுவாமி குருபூசை,*
*பிரதோச விரதம்*

**மேடம்** வருமானம் அதிகரிக்கும் நாள், எதிர் காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, கௌரவமான நாள்.

**இடபம்** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கடகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது.

**சிங்கம்** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புகள் வந்து சேரலாம், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், அபூர்வ சந்திப்புண்டு.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், கூட்டு முயற்சி வெற்றி தரும், தேக நலனில் உற்சாகம் பிறக்கும்.

**துலாம்** தொழிலை விருத்தி செய்ய எடுத்த முயற்சி வெற்றி தரும், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் பலனுண்டு, தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகமடைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்

**மகரம்** காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.


**கும்பம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்படவைக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் கண்ட சால்புக்கு இலக்கணமான ஆசான் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி



அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்
ஆர்வலர் புன் கணீர் பூசல் தரும்

என்றார் வள்ளுவர். இந்த உலகில் மிகப்பெரிய சொத்து அன்பு என்றால் அதில் மிகை இருக்கமுடியாது.

இதன் காரணமாகவே அன்பே சிவம் என்கிறது சைவசமயம். அன்பின் வடிவத்தை இறைவனாகப் பார்க்கின்ற அற்புதம் சைவ சமயத்தின் சிறப்பாகும்.

சைவம் கூறும் அன்பு கனிந்த வாழ்வை இன்று காண்பது அரிதெனினும் அந்த அன்புடைமை எத்தன்மையது என்ற கேள்விக்கு உதாரணமாக நாம் சுட்டிக்காட்டக்கூடிய பெருந்தகை ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி என்பது சாலப்பொருத்துடையது.

சிரித்த முகம், இன்முகத்துடன் வரவேற்கும் பண்பு, எவருக்கும் உதவி செய்கின்ற உயர்ந்த குணம், சிறியவர் பெரியவர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் மதிக்கின்ற மனிதநேயம் என அனைத்தும் ஒருங்கே அமைந்த அன்பு வடிவமாக ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களைக் காணமுடியும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபராக, தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் ஆளுமைப் பண்பு வித்தியாசமானது.

இன்றைய சமகால சூழ்நிலையில் அதிகாரிகளைச் சந்திப்பதும் அவர்களுடன் கதைப்பதும் கடினமான காரியம் என்ற நிலையில், ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களை எப்போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவரும் சந்தித்துத் தமது பிரச்சினைகளைக் கூறமுடியும். இதற்குக் காரணம் அவரிடம் இருந்த மனிதநேயமும் பிறர்மீது அன்பு செலுத்தும் உயர்ந்த பண்புமேயாகும்.

உள்ளத்தால்தனிலும் பிறரை ஒறுத்தாத அவர், குப்பிளானில் உள்ள தனது விசாலமான வீட்டையும் காணியையும் சிவபூமி ஆன்மீக நிலையத்திற்கு நன்கொடையாகக் கொடுத்த பரோபகாரம் அவரின் பொதுநலன் சார்ந்த உயர் அக்கறைப்பாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

நகைச்சுவையுணர்வும், வரலாறுகளை அறிந்து கொண்டுள்ள ஆழமான அறிவுப் புலமும், நல்ல ஞாபக சக்தியும் கொண்ட இவர் சிறந்த ஆசான், ஆளுமைமிக்க அதிபர், வினைத்திறன் மிக்க நிர்வாகி என்ற பல்பரிமாணங்களில் அவருக்கு உயர் புகழைப் பெற்றுக்கொடுத்தது.

இவ்வாறான உயர் சால்புடைமை உடைய, ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களுக்கு அவரின் மாணவர்கள் ஒன்று சேர்ந்து இன்று மணி விழா எடுப்பது அவர்மீது மாணவர் கொண்ட அன்புக்கும் பக்திக்குமான அடையாளமாகும்.

தற்பெருமை இல்லாத - உயர்ந்த குணமும், இனிமையாகப் பேசும் இயல்பும் அவருக்கு இறைவன் கொடுத்த கொடை என்றே கூறவேண்டும். எம்மால் முயற்சித்தும் அடைய முடியாத அந்தக் கொடையின் காரணமாக அவர் யாரையும் குறைகூறாத பண்புடையவராயினார் என்பதுடன் அவரையாரும் குறைகூறமாட்டார்கள் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

இன்றைய இளம் சமூகம், ஒரு நிமிட நேர மட்டில் பொறுமை கொள்ள முடியாத அளவில்- பிறர்மீது அன்பு செலுத்தமுடியாத அளவில் - மற்றவர்கள் மீது இரக்கம் காட்டமுடியாத அளவில் தங்கள் மனங்களை வக்கிரப்படுத்தி இருக்கின்ற வேளையில், இன்று மணி விழாக்காணும் பெருந்தகை ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள் இளம் சமுதாயத்திற்கு நாம் சுட்டிக்காட்டக் கூடிய உத்தமராக இருப்பதில் நாம் பெருமை அடைய முடியும்.

அன்பும் பொறுமையும் நட்பும் இரக்கமும் சாந்தமும் இறை பக்தியும் கொண்ட ஓர் உருவமாய் காட்சி தரும் ஆசான் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்களின் மணிவிழா அவருக்கானதல்ல ; அது அவரின் உயர் குணங்களுக்கானது என்பதை அவரை அறிந்தவர்கள் நிச்சயம் உணர்வர்.

- விஜயன்.

# மாநாட்டை புறக்கணிக்கக்கோரி தீர்மானம் நிறைவேற்றுக

## திருமாவளவன் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்கக் கோரி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக சட்டப் பேரவை எதிர்வரும் 23 ஆம் திகதி கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்காடு சட்டப் பேரவைக்கு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தக் கூட்டத் தொடர் அதிக நாட்கள் நடப்பதற்கு வாய்ப்பில்லை.

எனினும், முக்கியத்துவம் வாய்ந்த கால கட்டத்தில் கூடவிருக்கும் இந்தக் கூட்டத்தொ டரில் தமிழக மக்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் சில முடிவுகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் வேண்டுகிறேன்.

இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்திய அரசு பங்கேற்கக்கூடாது என தமிழகத்திலிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தியும் கூட இன்றுவரை இந்தியரசு தனது முடிவை அறிவிக்கவில்லை.

தமிழக மக்கள் அனைவரது உணர்வையும் மத்திய அரசுக்கு எடுத்துக்கூறும் விதமாக பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமரோ, இந்தியப் பிரதிநிதிகளோ பங்கேற்கக் கூடாது என வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென தமிழக முதல்வரை கேட்டுக் கொள்கின்றேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# காந்தீயம் இதழ் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் ஒக்டோபர் -நவம்பர் மாதங்களுக்கான இதழ் வெளிவந்துள்ளது.

இவ் வெளியீட்டின் இலவச பிரதி ஒன்றை தபால்மூலமாக பெற்றுக் கொள்ள விரும்புவோர் 5 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதப்பட்ட நீண்ட தபால் உறையை ஆசிரியர் காந்தீயம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இல, 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியும் என காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (அ)

# மங்கள சமரவீர எம்.பி. பொலிஸாரிடம் சரண்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தான் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

மாத்தறை பொலிஸ் நிலையத்திலேயே அவர் அவரது சட்டத்தரணியுடன் வந்து சரணடைந்ததாகத் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களும் அவருடன் பொலிசில் சரணடையவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் இடம்பெற்ற தினம் முதல் ஒரு வாரம் வரை நான் மாத்தறை பொலிஸ் நிலையத்துக்கு ஏறி இறங்கியிருக்கிறேன்.

எனது ஆட்கள் ஆரம்பத்தில் கைகளில் ஒரு சிறு குச்சியைக் கூட வைத்திருக்கவில்லை. எனினும் வன்முறைகளில் ஈடுபடவில்லை என்பதற்கு வீடியோ ஆதாரங்கள் இருந்த போதிலும் எனது முக்கிய ஆதரவாளர்கள் 24 பேரை நானாகவே பொலிசாரிடம் ஒப்படைத்திருந்தேன்.

என்னை வேண்டுமானால் விசாரியுங்கள்; தேவையென்றால் கைதுசெய்யுங்கள் என்றெல்லாம் கூறியிருந்தேன். நான் பொலிசாருக்கு வழங்கிவந்த ஒத்துழைப்புக்காக அவர்கள் எனக்கு நன்றியும் கூறியிருந்தார்கள்.

ஆனாலும் திடீரென்று அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அழுத்தம் காரணமாக என்னைக் கைதுசெய்ய முடிவெடுத்திருக்கிறார்கள் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மோதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# சா.த.மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள தமிழ் மாணவர்களின் க.பொ.த.சாதாரணதர பெறுபேறுகளை முன்னேற்றும் நோக்கில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர் நூலகம் நிறுவனத்தினால் கணித, விஞ்ஞான இலவசக்கல்வி கருத்தரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக வட மாகாணத்தின் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நேற்று செவ்வாய்க்கிழமையும் இன்று புதன்கிழமையும் காலை 9 மணி முதல் நடைபெற்று வருகிறது. இதன்படி யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், யா/நாமக்கல் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/கோப்பாய் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் யா/பெரியபுலம் மகா வித்தியாலயம், யா/கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாலயம், யா/உயரப்புலம் மகாவித்தியாலயம், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்திலும் இக்கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

மேலும் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி, யா/இடைக்காடு மகா வித்தியாலய மாணவர்களுக்கு யா/அச்சுவேலி மத்திய கல்லூரியிலும், யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம், யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலய மாணவர்களுக்கு யா/ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயத்திலும் யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மற்றும் யா/அத்தியார் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளிலும் மேற்படி விஞ்ஞான, கணித இலவச கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தை ஒத்திவைக்க பௌத்த பிக்கு தீர்மானம்

(கொழும்பு)

சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்தை ஒத்தி வைப்பதற்கு வெலிவேரிய பௌத்த பிக்கு தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு நடைபெறவுள்ள காரணத்தினால் குறித்த போராட்டத்தை ஒத்தி வைக்க இவர் தீர்மானித்துள்ளார்.

இலங்கை மீது சர்வதேச சமூகம் குற்றம் சுமத்த இடமளிக்கக்கூடாது என வெலிவேரிய விஹாரையின் பீடாதிபதி திரிபயே சிரிதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

புத்திசாதுரியமாக செயற்படுவதானது போராட்டத்தை காட்டிக் கொடுப்பதாக அர்த்தப்படாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லிவேரிய கையுறை உற்பத்திசாலையை மூடிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. மக்களுக்கு குடிநீர் கிடைத்து தொழிற்சாலை அகற்றப்பட்டால் வேறு எதுவும் தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது எவரும் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# குடும்பப்பெண் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர்

## யாழ்.ம.உ.ஆணைக்குழுவிடம் முறையீடு

குடும்பப் பெண்ணை பொலிஸார் தாக்கியதாக யாழ். மனிதவுரிமை ஆணைக்குழுவிடமும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் குடத்தனை பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் மீது ஆண் பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர். மேற்படி பெண்ணின் மகன் மீது சுமத்தப்பட்ட திருட்டுக் குற்றச்சாட்டைத் தொடர்ந்து குடத்தனையிலுள்ள அவரது வீட்டிற்கு வாகனத்தில் சென்ற நெல்லியடிப் பொலிஸார் அறுவர், குற்றம் சுமத்தப்பட்டவரின் சகோதரியை வலிப்பு நோயால் அவர் வாயினால் நுரை தள்ளி மயங்கி விழும்வரை தாக்கியுள்ளனர் என குடும்பத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது.

அதைத் தடுக்க முற்பட்ட தாயாரை உதைத்துத் தள்ளியதுடன் பெண் பொலிஸார் எவரும் அங்கு கூட வராத நிலையில் அப் பெண்ணைக் கடுமையாகத் தாக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

பதினாறாயிரம் ரூபா பணம் செலுத்தினால் மாத்திரமே அப்பெண்ணை விடுவிக்க முடியும் என்று பொலிஸார் கூறியதையடுத்து அப்பணம் செலுத்தப்பட்டதன் பின்னரே அவரை விடுவித்துள்ளனர்.

மேற்படி பெண் தற்போது மன நிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவ்விடயம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடமும் உறவினர்கள் முறையிட்டுள்ளனர். (அ-4)

# முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்பட்டது

(கரணவாய்)

நெல்லியடி முச்சக்கரவண்டிச் சங்கத்தினரால் முச்சக்கர வண்டிகளுக்கான மீற்றர் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நேற்றைய தினம் 16 முச்சக்கர வண்டிகளுக்கு நெல்லியடி முச்சக்கர வண்டி சங்கத்தினரால் மீற்றர்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இம் மீற்றரின் அடிப்படையில் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை பயணிப்பதற்கு 80 ரூபாவும் அடுத்து வரும் ஒவ்வொரு கிலோ மீற்றர் பயணிக்கின்ற போது கிலோ மீற்றருக்கு 50 ரூபா வீதமும் பணம் அறவிடப்பட வேண்டுமென சங்கத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் இன்னும் 80 முச்சக்கர வண்டிகள் மீற்றர் பொருத்த வேண்டிய நிலையில் உள்ளன. எனவே, மீற்றரைப் பொருத்தாத முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மீற்றரைக் குறித்த சங்கத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் நெல்லியடிப் பிரதேசத்தில் இனிவரும் நாட்களில் மீற்றர் இன்றி முச்சக்கர வண்டியை செலுத்த முடியாது எனவும் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9-60)


**English from Junior to Adult & Kids care**

| Level | Grade | Age |
|---|---|---|
| Junior | Gr -1, 2 | 5+,6,7yrs |
| Intermediate | Gr -3, 4, 5 | 8, 9,10 yrs |
| Higer.Inter | Gr - 6,7,8,9 | 11,12,13yrs |
| Senior | Gr -10,11,12 | 14 - 18 yrs |
| Adult | 19 yrs & above | |

We also provide
*Infant/Toddler care*
*Mon - Fri - 7.30 - 5.30*
*Kid care*
*Mon - Fri - 12.30 - 5.30*
Admissions open from 15th Oct

Toddlers are tricky!
To help you navigate the toddler years we offer a
*a stimulating curriculum
*well supervised environment
*best toys for each age group
&
*age-appropriate activities

*Listening, Speaking, Reading and Writing are "Macro" skills of a language and grammar, vocabulary, spelling and pronunciation are "micro skills!! Our English syallabus is set to cover both macro & micro skills!*

(சி/5182)

Visalam
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com



**NORTH LANKA IIT**

வழங்கும் அரிய சந்தர்ப்பம்!
விஜயதசமி விழாவை முன்னிட்டு
50% Scholarship!

SRI LANKAN UGC APPROVED CERTIFICATE!
Business University - Costa Rica

நீங்களும் கணினிப் பட்டதாரியாகுங்கள்!

* B.Sc. in Comp. Sc.
Qualification:- HND or O/L or A/L
Duration:- 1 - 3 Years

Special Batch!

* M.Sc.
Duration:- 01 Year

* MBA

கல்வியயற் கல்லூரி மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட பிரிவு!

சலுகைக் கட்டணத்தில் ....

(சி/5191)

கனகபுரம் வீதி, (HNB க்கு அருகாமையில்)
கிளிநொச்சி. TP : 0777471515
#113, Luxan Plaza, Navalar Road, Jaffna.
Tel: 0215677774 Mob: 077[illegible]2666



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 13.75<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, இ.போ.ச. சாலைப் பரிசோதகர்<br>தொ.இ:B861 | பிறப்பு: 1986 இந்து(சைவக்குலம்)<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா :23.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G1152 |
| பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 168 செ.மீ<br>கி.பா: 3<br>தகைமை/ தொழில்: B.Com (Management), வங்கி உதவி முகாமையாளர்<br>தொ.இ:B862 | பிறப்பு: 1982 இந்து RC (Pa)<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: GAQ தனியார்( FO)<br>தொ.இ:G1160 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா:29.75 செவ்:8ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDA நிகழ்ச் சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ:B847 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா :73 சூரி, செவ் 8ல்<br>உயரம்: 161செ.மீ<br>தகைமை/தொழில்: B.Sc (Hons) பொறியியலாளர்<br>தொ.இ:G1161 |
| பிறப்பு: 1977 இந்து (KO)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 30.25 செவ்: 4ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.Com (Hons) பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ:B866 | பிறபபு: 1977<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா :17.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: சுவீடன் (PR) (கணவனை இழந்தவர்)<br>தொ.இ:G1162 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணமாக்கல் சபையின் விருதுக்கு 5 நூலகங்கள் தெரிவு


சாவகச்சேரி பிரதேச சபையின் 5 நூலகங்கள் தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கைதடி, சரசாலை, நாவற்குழி, வரணி, மிருசுவில் ஆகிய இடங்களில் அமைந்த நூலகங்களே இவ்விதம் விருது பெறுவதாக அறிவிக்கப்பட்டவையாகும்.

இவற்றின் மிகச் சிறந்த நூலக சேவை செயற்பாடுகளைக் கருத்தில் கொண்டே கொழும்பிலுள்ள தேசிய நூலக ஆவணமாக்கல் சபை கடந்த 2012 ஆம் ஆண்டைப் போல இவ்வருடமும் இந்த நூலகங்களுக்கு விருதை வழங்கவுள்ளது.

இந் நூலகங்களின் நூலகர்கள் தமக்குரிய விருதுகளை எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு 7 இல் அமைந்துள்ள தேசிய நூலக ஆணவமாக்கல் சபையின் தலைமை அலுவலகத்தில் நிகழவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-254)



# வடமாகாண அபிவிருத்தி மற்றும் உரிமையை வென்றெடுக்க உழைப்பேன்

## வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன்

**(யாழ்ப்பாணம்)**

**முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவி இல்லை என்ற குறையை நான் நிவர்த்தி செய்வேன் என மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தகம், கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

உத்தியோகபூர்வ கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செட்டித் தெருவிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 ஆண்டுகால ஆயுத அகிம்சைவழிப் போராட்டத்தினால் ஆறாத மனவடுக்களை கொண்டுள்ளோம். எனவே, மக்களை அபிவிருத்திப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும்.

உண்மையில் அபிவிருத்தி என்பது அத்தியாவசியமாகும். அதேநேரம் எமக்கான உரிமைகளை விட்டுக் கொடுக்க முடியாது.

எனவே எமது அபிவிருத்தி, உரிமை என்பனவற்றை சமமாக முன்னெடுத்துச் செல்வேன்.

எனது அமைச்சின் கீழ் வரும் பொறுப்புகளை சரியாக மேற்கொண்டும் மாகாணத்தையும் எமது இனத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் என எண்ணியுள்ளேன். இதற்கு அதிகாரிகளினதும் மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். இதனை வழங்குவீர்கள் என நான் நம்புகின்றேன்.

எமது முதலமைச்சர் இவ்வமைச்சுப் பதவியினூடாக வறிய மக்களுக்கு உதவி செய்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளார்.

முதலமைச்சர் என்மீது கொண்டுள்ள நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன் என எனது மக்களுக்கு இந்நேரத்தில் உறுதி கூறுகின்றேன்.

முல்லைத்தீவிற்கு நேற்று முன்தினம் சென்றிருந்தேன். அங்கு ஓர் அமைச்சுப் பதவி இல்லையென்ற குறையிருந்தது. எனினும் நான் அங்கு சென்றதன் பின்னர் அம்மாவட்டத்தின் குறை நீங்கிவிட்டது எனவும் அவர்கள் கூறியிரு ந்தனர்.

தமக்கு நிவாரணங்கள் கிடைக்காவிட்டாலும் தம்மை உடன் வந்து பார்வையிட்டமை தமக்கு மகிழ்ச்சியை தருகின்றது என அவர்கள் தெரிவித்தனர்.

எனது அமைச்சினூடாகவும் ஏனைய அமைச்சுகளினுடாகவும் வருகின்ற உதவிகள் அனைத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெற்றுக் கொடுப்பதற்கு நான் முழுமூச்சாக உழைப்பேன்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை இவ்வாரத்திற்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எமது முதலமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

எனவே, சுனாமி, போராட்டம், சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் எமது உதவிகள் துரிதமாக வழங்கப்படும்.

வறுமையினால் எவரும் கல்வியை இழக்கக்கூடாது என்பது எனது நோக்கமாகும் என்றார். (அ-4)

# போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு,

இதன்படி புராண படனப் போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி ஆகிய கல்லூரிகளும் வில்லிசைப் போட்டியில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்டுள்ளன.

இப் பாடசாலைகளுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது. (அ-7)

# பரிசளிப்பு விழா

(தும்பளை)

யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

பரிசில்களை வடமராட்சி மத்திய கல்லூரியின் பகுதித் தலைவர் திருமதி ராஜராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்கவுள்ளார். (அ-9-19)

# சட்டவிரோத மதுபான விற்பனை; நபர்களுக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை மதுவரித் திணைக்களத்துக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற சட்டவிரோத மதுபான விற்பனை நடவடிக்கைகளினால் இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து இதுவரையான காலப்பகுதியில் நீதிமன்றங்களால் 4 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறிவிடப்பட்டுள்ளது.

மேற்படி திணைக்களத்தினரின் திடீர் பரிசோதனைகளினூடாக அனுமதிப்பத்திரமின்றி மதுபானப் பொருட்களை விற்பனை செய்தல், மதுபானசாலைகள் தவிர்ந்த இடங்களில் மறைவாக வைத்து மது விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகளில் இவ்வருடத்தில் ஈடுபட்ட 227 பேருக்கு எதிராக மல்லாகம், ஊர்காவற்றுறை போன்ற நீதிமன்றங்களில் வழக்குகள் இடம்பெற்றன.

இதன்படி, நீதிமன்றங்களினால், ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிகளில் 2 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவும் ஜூலை மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடந்த வருடத்தைவிடவும் இவ்வருடம் சட்ட விரோதமான மதுபான விற்பனை நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளதாகவும் அத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-9)

# நாவற்குழி மக்களின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வீட்டுத்திட்டப்பகுதி வாழ் மக்களை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்தித்துள்ளார்.

மேற்படி சந்திப்பானது நேற்று முன்தினம் அப்பகுதியிலுள்ள அற்புத அன்னை சனசமூக நிலையத்தில் சனசமூக நிலையத்தலைவர் ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ப.குமாரசிங்கம், சனசமூக நிலையச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதுடன், அப்பகுதி மக்களின் குறை நிறைகளையும் பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் அற்புத அன்னை சனசமூக நிலையத்தில் காணப்பட்ட மின்சாரக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக சனசமூக நிலையத் தலைவரிடம் பதினையாயிரம் ரூபா பணத்தினை இந்நிகழ்வில் கையளித்துள்ளார். (அ-4)



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தினம் நேற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் சிறார்களின் கலை நிகழ்வு இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ சூதாட்டத்திற்கு இடம்கொடுத்து பாரிய நிதியை மோசடி செய்ய முயற்சி

## ஹர்ச டி சில்வா எம்.பி.கொதிப்பு

(கொழும்பு)

**சம்பூரைக் கொடுத்து இந்தியாவை பொது நலவாய மாநாட்டிற்கு வரவழைப்பதைப் போன்று கசினோவுக்கு இடம்கொடுத்து அவுஸ்திரேலியாவையும் வரவழைக்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்கின்றது. அப்பாவி மக்களுக்கு பெரியதொரு துரோகத்தையே அரசாங்கம் செய்து வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் கசினோ சூதாட்டத்திற்கு 40 சதவீத வரி அறவிடப்படும்.

சம்பூர் அனல்மின் நிலைய உடன்படிக்கையை இந்தியாவுடன் பகிர்ந்து இந்தியாவைக் கவர முயற்சி செய்யும் அரசாங்கம் தற்போது கசினோ சூதாட்டத்தை மேற்கொள்ள அவுஸ்திரேலியாவிற்கு இடம்கொடுத்து அவர்களையும் கவரும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ளது.

கசினோ சூதாட்டத்தை அனுமதிக்கமாட்டோம். பௌத்த நாட்டில் சூதாட்டத்திற்கு இடமில்லை என கடந்த காலங்களில் குறிப்பிட்ட அரசாங்கத்தினர் இன்று ஜேம்ஸ் பெக்கரையும் அவரது குழுவினரையும் இலவசமாக கசினோ சூதாட்டத்தில் ஈடுபட அனுமதித்துள்ளனர்.

அப்பாவி மக்களிடம் உணவுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் வரி அறவிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெளிநாட்டு சூதாட்டக்காரர்களுக்கு இலவச வசதிகளையும் உல்லாச களியாட்ட வசதிகளையும் செய்து கொடுக்கின்றது.

இலங்கையில் கசினோவுக்கு 40 வீத வரி அறவிடப்படும் நிலையில் வெளிநாட்டு சூதாட்டக்காரர்களுக்கு இலவச சலுகைகளுடன் சூதாட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவும் இணைந்து பல கோடிப் பணத்தை கொள்ளையடிக்கும் திட்டம் இது என்பதை சாதாரண மக்களும் தெரிந்து கொள்ளவேண்டும்.

கசினோ தொடர்பிலான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுன்னர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன என்னுடனான நேரடி விவாதத்திற்குவரவேண்டும். எந்த ஊடகத்திற்கும் நான் கருத்து தெரிவிப்பேன்.

அவருக்கு தைரியமிருந்தால் இச்சட்டம் சரியானதென நினைத்தால் என்னுடன் விவாதிக்க வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## இந்திய மீனவர்கள் 22 பேர் கைதாகினர்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் 22 பேர் தலை மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே நேற்று முன்தினம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் ஐந்து படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இந்த 22 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தற்போது குறித்த மீனவர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)



தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபை நாவற்குழி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களினால் வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் எனும் தெருவெளி ஆற்றுகையானது நாவற்குழிப் பிரதேசத்தின் பல்வேறு பட்ட இடங்களில் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாற்றுகையில் இடம்பெற்ற ஒரு காட்சி... (படம்:- மல்லாகம் செய்தியாளர்)

# மக்கள் கொடுத்த ஆணையை கூட்டமைப்பு எவ்வாறு பயன்படுத்த போகின்றது?

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கேள்வி

(கொழும்பு)

வடக்கு மாகாணசபை தேர்தலின் மூலம் தமிழர் தாயகத்தில் அரசாங்கத்தின் ஆட்சி தேவையில்லை என்பதை வெளிப்படுத்தியிருக்கும் தமிழர்கள், சுயநிர்ணய அடிப்படையிலான நீண்ட அரசியல் அபிலாஷையிலிருந்து தமிழர்கள் சற்றும் விலகிவிடவில்லை என்ற செய்தியினையும் மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களுடைய இந்த ஆணைக்கு நாம் தலைவணங்குகின்றோம். ஆனால் ஆணையை கொடுத்துவிட்டு மக்கள் ஒதுங்கியிருக்காது நீங்கள் எதற்காக ஆணையை கொடுத்தீர்களோ அது நிறைவேற்றப்படுகின்றதா என்பதிலும் அவதானம் தேவை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

மாகாணசபை தேர்தலின் பின்னரான நிலைமைகள் குறித்து நேற்று முன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் முன்னணியினர் நடத்தியிருந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் மேலும் அவர் உரையாற்றுகையில், 13ஆவது திருத்தச்சட்டத்தையும், அதன் கீழமைந்த மாகாணசபை முறைமையினையும் நாம் ஏற்றுக்கொள்ளாதபோதும். அதனை மக்களின் மனசாட்சிக்கு விட்டிருந்தோம். இந்நிலையில் மக்கள் அதிகளவில் பங்கெடுத்து மிகத்தெளிவான செய்தியை கூறியிருக்கின்றார்கள்.

அதாவது தமிழர் தாயகத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி தேவையில்லை என்பதையும், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் நீண்டகாலம் வலியுறுத்திவரும் தமது அரசியல் அபிலாசைகளிலிருந்து நாம் சற்றும் விலகிவிடவில்லை என்பதையும் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

மக்களிடமிருந்து ஆணையை பெற்றுக் கொண்டவர்கள் அதனை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றார்கள் என்பது அடுத்துள்ள கேள்வி. பிரித்தானியர்கள் இந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர் உருவாக்கப்பட்ட அத்தனை அரசியலமைப்புக்களையும் தமிழர்கள் நிராகரித்து வந்திருக்கின்றார்கள்.

இம்முறை சரித்திரத்தில் எப்போதும் இல்லாத வகையில் தமிழர்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். த.தே. கூட்டமைப்பு மேடைகளில் பேசியது ஒன்று, ஆனால் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததொன்று.

இங்கே பிரச்சினை என்னவென்றால் இப்போதிருக்கும் தலைமுறையினருக்கு நாங்கள் எதற்காக வாக்களித்தோம் என்பது தெளிவாகத் தெரியும். ஆனால் இனிவரும் தலைமுறையினருக்கு அது தெரியப்போவதில்லை. காரணம் அவர்களு டைய காலத்தில் இருக்கப்போவது இந்த தேர்தல் அறிக்கை மட்டுமே.

எனவே அவர்கள் தங்களுடைய கடந்த காலத்தவர்கள் ஒற்றையாட்சி முறைமையினை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நிச்சயமாக நம்மவர்கள் குறிப்பாக த.தே.கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையினை பார்த்தால் 13 ஆம் திருத்தச் சட்டத்தை ஆரம்ப புள்ளியாக கொள்ள வேண்டும் என்பது தெரியும்.

சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேடைகளில் சுயநிர்ணய உரிமை என பேசினார்கள். அதனை மக்கள் நன்றாக அறிவார்கள். மேடைகளில் போராளிகளை கௌரவித்தார்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை மாவீரன் என்றார்கள்.

அனைத்தும் சுயநிர்ணய உரிமைக்கானவை, ஆனால் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டார்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வு என்று. எனவே மக்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சுயநிர்ணய உரிமை என்பதும், ஒற் றையாட்சி, சமஷ்டி என்பதும் ஒன்றல்ல. ஒன்றுக்கொன்று தொடர்பற்ற தனித்தனியான முறைமைகள் இவை.

மக்களிடம் போவதற்கு சுயநிர்ணய உரிமை தேவைப்படுகின்றது. ஆனால் ஆவணத்தில் ஒற்றையாட்சி முறைக்குள் முடக்கும் செயற்பாடு நடக்கின்றது.

ஆனால் பத்திரிகையாளர் சந்திப்பில் 13ஆம் திருத்தச்சட்டத்தினடிப்படையில் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வினை அடைவதற்காக மக்கள் ஆணை வழங்கினார்கள் என்று சம்பந்தன் குறிப்பிட்டார். தேர்தலின் முன்னர் உங்கள் வாக்குகள் அபிவிருத்திக்கா? சுயநிர்ணய உரிமைக்கா? என்று கேட்டார்கள். ஆனால் தேர்தலின் பின் நடந்தது என்ன? ஐக்கிய இலங்கைக்குள் 13 ஆவது திருத்தச் சட்டத்தினடிப்படையில் தீர்வு என்கின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக பலமடைகின்றபோது, மக்கள் ஆதரவு அவர்களுக்கு அதிகரித்துவரும் போது மக்களை புலிகளிடமிருந்து பிரிப்பதற்கு, புலிகளே பிரச்சினை நாங்கள் அதிகபட்ச தீர்வுகளை தருகிறோம் என்று காட்டுவதற்கும், இன அழிப்பை நியாயப்படுத்துவதற்குமே இவை உருவாக்கப்பட்டன.

அவ்வாறு புலிகளே பிரச்சினையாக அல்லது தடையாக இருந்தார்கள் என்றால், புலிகள் மௌனிக்கப்பட்டு நான்கு வருடங்களாகின்றன. ஏன் ஒரு தீர்வினை இதுவரையில் கொடுக்கவில்லை? இந்த நிலையில் உண்மைகளை மறைத்து புது வியாக்கியானம் கொடுக்க நினைக்கின்றார்கள்.

இறுதியாக அந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது போரில் இரு தரப்புக்கள் ஈடுபட்டிருக்கின்றன. அவர்கள் இருவரும் மோதிக் கொள்ளும்போது போர்க் குற்றங்கள் நடந்திருக்கின்றன. அவை விசாரிக்கப்படவேண்டும், பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்று உருவரக்கப்பட வேண்டும் என்று,

இதனை ஒரு நடுநிலையான அறிக்கையாக நாம் பார்க்கலாம். ஆனால் அது அவ்வாறில்லை. இங்கே இரு தரப்புக்களும் மோதுவதற்கான பின்னணி என்ன? ஏன் மோதிக் கொண்டார்கள் என ஒரு இடத்திலேனும் குறிப்பிடப்படவில்லையே? என அவர் மேலும் தெரிவிகத்தார். (அ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாயக்கண்ணாடி

...எனக்கு இருநூறு வயதாகிறது. இதுவரையில் மனிதனின் காலடியே இந்தக்காட்டுப்பகுதியில்பட்டதில்லை. இவ்வளவு தொலைவு என்னைத் தேடி வந்திருக்கும் நீ யார்? எதற்காக என்னைத் தேடி வந்திருக்கிறாய்? என்று கேட்டாள்.

முட்டாள் இளவரசன் மாயக் கண்ணாடியைத் தேடி வந்திருப் பதை அவளிடம் தெரிவித்தான்.

அவள், என் இளவயதில் நான் இதைப் பற்றிக்கேள்விப்பட்டிருக்கி றேன். ஆனால், அது எங்கே இருக் கிறது என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் நான் உனக்கு உதவி செய்ய விரும்புகிறேன். இன்று இரவு என் குடிஃசயில் தங்கி இரு. காலை யில் நான் கேட்டுச்சொல்கிறேன் என்றாள்.

முட்டாள் இளவரசன் அன்று இரண்டு சாப்பிட்டுவிட்டு குடிசையி லேயே தங்கிவிட்டான்.

காலையில் கண்விழித்ததும் கிழவியிடம் சென்று மாயக்கண் ணாடியைப் பற்றி ஏதாவது விவரம் தெரிந்ததா? என்று கேட்டான்.

கிழவி உடனே மரப்பொந்தில் இருந்து ஒரு ஊதுகுழலை எடுத்து ஊதினாள். உடனே அந்தக் காடே சிலிர்த்தது. புல் பூண்டுகள், செடி, கொடிகள் ஆகியவை உயிர் பெற்ற தைப்போல ஆடின. சிறிது நேரத்தில் காட்டில் இருக்கும் புழுக்கள், பூச்சிகள், நத்தைகள், எறும்புகள், ஊர்வன அத்தனையும் குடிசைக்கு முன் னால் அணி திரண்டன.

அவற்றிடம் கிழவி மாயக்கண் ணாடியைப் பார்த்தது உண்டா? என்று கேட்டான்.

அவைகள் நாங்கள் பார்த்ததோ, கேள்விப்பட்டதோ இல்லை என்றன.

ஜன்னல் வழியாக இந்தக் காட்சி யைப் பார்த்த முட்டாள் இளவரசன் வியப்படைந்தான்.

முட்டாள் இளவரசனைப் பார்த்து கிழவி, கவலைப்படாதே, இவைகளுக் குத் தெரியாவிட்டால் எனக்கு இன் னொரு வகையான நண்பர்கள் இருக் கிறார்கள். அவர்களை அழைத்துக் கேட்டுப் பார்க்கிறேன் என்று சொல்லி விட்டு, ஊதுகுழலை எடுத்து ராகத் தோடு ஊதினாள்.

அடுத்த நொடியில் மரங்களின் கிளைகள் சலசலத்தன. காடு முழு வதிலும் இருந்த மரங்கள் ஆடின. கோடிக்கணக்கான பறவைகள் ஆகா யத்தில் இருந்தும் கூடுகளில் இருந் தும் மரக்கிளைகளில் இருந்தும் பறந்து வந்தன.

பறறைகளின் சிறகடியோசை பேய்க் காற்றாக ஊளையிட்டது. சிறிய குருவிகள் முதல் பெரிய நாரை கள் வரையிலான எல்லாவகைப் பறவைகளும் கிழவியின் குடிசையின் முன்னால் திரண்டுநின்றன.

கிழவி அவைகளிடம் உங்களில் யாராவது மாயக்கண்ணாடியைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர் களா? அல்லது பார்த்திருக்கிறீர்களா? என்றுகேட்டாள்.

அவைகள், காட்டின் தலைவியே நாங்கள்மாயக்கண்ணாடியைப்பற்றிக் கேள்விப்பட்டதும் இல்லை, பார்த் ததும் இல்லை என்று பதில் கூறின.


கிழவிபறவைகள்சொன்னபதிலை முட்டாள் இளவரசனிடம் தெரிவித் தாள். இதைக் கேட்டு அவன் மிகவும் வருத்தம் அடைந்தான்.

அதைப் பார்த்த கிழவி, வருத்தப் படாதே, எனக்கு இன்னொரு தோழி இருக்கிறாள். அவளை அழைத்து மாயக்கண்ணாடியைப்பற்றிக் கேட்டுப் பார்க்கிறேன். அவளுக்கும் தெரிய வில்லை என்றால், நிச்சயம் மாயக் கண்ணாடி என்ற ஒன்று எந்த உல கத்திலும் கிடையாது என்று முடிவு செய்துவிடலாம் என்றாள்.

பிறகு அவள் தனது அதிசய ஊது குழலை எடுத்து மிகப்பலமாக ஊதி னாள். சிறிது நேரத்திற்குப் பிறகு, வானம் இருண்டது. பெருங்காற்று வீசியது.

முட்டாள் இளவரசன் குடிசையை விட்டு வெளியே வந்து ஆகாயத்தைப் பார்த்தான். மிகப்பெரிய இரட்டைத் தலை ராட்சதப்பருந்து ஒன்று குடி சையை நோக்கிப் பறந்து வந்தது. குடிசைக்கு அருகில் இருந்த பெரிய பாறை ஒன்றின் மீது அமர்ந்தது.

காட்டின் தலைவியே என்னை



அழைத்த காரணம் என்ன? என்று கிழவியைப் பார்த்துக்கேட்டது.

மாயக்கண்ணாடி பற்றி உனக்கு ஏதாவது தகவல் தெரியுமா? என் றாள் கிழவி.

மாயக்கண்ணாடி இருக்கும் இடம் எனக்கு தெரியும். இதுவரையில் எந்த மனிதனும் அது இருக்கும் இடத்தை அடைந்தது இல்லை. அது உனக்கு எந்த வகையில் பயன்படும் என்று தெரியவில்லை என்றது இரட்டைத் தலை பருந்து.

மாயக்கண்ணாடிஎனக்குத்தேவை யில்லை. அது இருக்கும் இடத்திற்கு என்னுடைய விருந்தாளியான இந்த இளவரசனை அழைத்துச்செல் என் றாள் கிழவி.

இங்கே இருந்து ஒன்பது பகல், ஒன்பது இரவு பயண தொலைவில் கடலுக்கு நடுவே மிகப்பெரிய தீவு இருக்கிறது. அந்தத் தீவில் ஓர் இள வரசி இருக்கிறாள். அவளது சயன அறையின் கீழே இருக்கும் ரகசிய அறையில்மாயக்கண்ணாடிஉள்ளது. அந்தத் தீவைச் சுற்றி மிகமிக உயர மான மலைத் தொடர்கள் நான்கு புறமும் வளைத்துக்கொண்டுள்ளன. எனவே, எந்தக் கப்பலும் அந்தத் தீவின் அருகே சென்று நங்கூரம் இட்டு நிற்க முடியாது என்று தெரி வித்தது இரட்டைத் தலைப் பருந்து.

இதுவரையில் எந்த மனிதனும் செல்லாத அந்த தீவிற்கு இவனை அழைத்துச்செல் என்று கட்டளை யிட்டாள் கிழவி.

சரி என்ற பருந்து, இளவரச னைப் பார்த்து நீ என் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டு உன் கை களால் என் கழுத்தை இறுக்கமாகக் கட்டிக்கொள். நான் உன்னை ஏற்றிக் கொண்டு வானத்தில் பறந்து சென்று அந்தத் தீவில் இறக்கிவிடுவேன். ஆகாயத்தில் செல்லும்போது கண் களைத் திறந்து பார்க்காதே என்று எச்சரித்தது.

இளவரசன் பருந்தின் மீது உட் கார்ந்துகொண்டு அதன் கழுத்தை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டான். அது ராட்சத இறக்கைகளை விரித்துக் கொண்டு சூரியனைப் பிடிப்பதைப் போல வேகமாக பறந்து.

ஒன்பது பகலும் ஒன்பது இரவும் கழிந்த பிறகசு பருந்து அவனை தீவின் கரையில் இறக்கிவிட்டது.

தீவிற்குள் செல்ல பெரிய நுழை வாயில் காணப்பட்டது. வாயிலின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு ராட்சதக் கரடிகள் காவல் காத்தன.

இவற்றைத் தாண்டி தீவிற்குள் எப்படி நுழைவது? என்று முட்டாள் இளவரசன் யோசித்தான்.

உடனே இரட்டைத்தலைப் பருந்து தன் சிறகில் இருந்து இரண்டு இறகு களை அலகினால் கோதி எடுத்து அவனிடம் கொடுத்தது.

பகல் மறைந்து இரவு வந்ததும், நீ நுழைவாயிலுக்கும் அருகில் செல். அந்தக் கரடிகள் உன்னை நோக்கி வரும்போது இறகுகளை அவற் றின் மீது வீசி எறி. அவைகள் உறங்க ஆரம்பித்துவிடும். நீ வேகமாக நடந்து சென்றுஇளவரசியின்சயனஅறையை அடைந்து, மாயக்கண்ணாடியைத் எடுத்துக்கொள். பிறகு ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் இங்கே வந்துவிடு என்று சொல்லி அனுப்பிவைத்தது.

முட்டாள் இளவரசன் இரவு வரும் வரையில் ஒரு பாறைக்குப் பின்னால் மறைந்து இருந்தான். நிலவு எழுந் ததும் நுழைவாயிலை நோக்கிச் சென்றான்.

அவனைப் பார்த்ததுமே ராட் சதக் கரடிகள் கோரமாகக் கத்திக் கொண்டு தாக்குவதற்கு வந்தன.

முட்டாள் இளவரசன் சிறிதும் தாமதிக்காமல் இறகுகளை அவற் றின் மீது வீசி எறிந்தான். உடனே மந்திரம் போட்டதைப் போல கரடிகள் சுருண்டு விழுந்து உறங்க ஆரம் பித்தன.

இளவரசன் மிக வேகமாக நடந்து இளவரசியின் சயன அறையை அடைந்தான். அரண்மனையில் இருப்பவர்கள் அனைவரும் அயர்ந் திருந்தனர்.

மிக எளிதாக அவன் ரகசிய அறைக்குள் இருந்த மாயக்கண் ணாடியைக்கையில்எடுத்துக்கொண் டான்.

அறையைவிட்டுவெளியேபோகும் சமயத்தில் ஒரு மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட் கள்அவன்கண்களில்பட்டது. உடனே, அவனுக்குப் பசி எடுத்தது. இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. நாம் தான் வந்த வேலையை மிகச் சுலப மாக முடித்துவிட்டோமே. அதனால் பொறுமையாக வயிறு நிறைய சாப் பிட்டுவிட்டுப் போகலாம் என்று முடிவு செய்தான் அவன்.

எனவே, ஒரு நாற்காலியை இழுத் துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து, பலகாரங்களைச் சாப்பிட ஆரம்பித் தான்.

(தொடரும்)

10.2013
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1775-ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத் தின் போர்ட்லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.
- 1793-பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனின் மனைவி மரீ அண்டொ னெட் கழுத்து வெட்டி மரணதண்டனைக் குட்படுத்தப்பட்டாள்.
- 1799-பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டான்.
- 1813-ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்கு தலை ஆரம்பித்தன.
- 1834-லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனை யின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்த சேதமடைந்தன.
- 1905-பிரித்தானிய இந்தியாவில் வங்களாப் பிரிப்பு இடம்பெற்றது.
- 1939- இரண்டாம் உலகப்போர்: பிரித்தானியா மீதான ஜெர்மனிய வான்படையின் முதலா வது தாக்குதல் இடம்பெற்றது.
- 1942-பம்பாயில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1949-கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர்நிறுத்தத்தை ...றிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1951-பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக்கொல் லப்பட்டார்.
- 1964- மக்கள் சீனக்குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண் டது.
- 1973-ஹென்றீ கிசிங்கர், லே டுக் தோ அமைதிக் கான நோபல் பரிசு பெற்றனர்.
- 1975-கிழக்குத் திமோரில் ஆஸ்திரேலிய தொலைக் காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்துபேர் இந் தோனேசியப்படைகளினால் சுட்டுக்கொல் லப்பட்டனர்.
- 1984- தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டூடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1998-சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகு ஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.
- 2006- இலங்கையில் 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக் கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர்நீதிமன்றம் அறிவித்தது.

சிறப்புநாள்
உலக உணவு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



ஆன்மீகம் 08

…அன்பு என்பது மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமல்ல. அது ஆழமான, ஆனால் அழகான வலி. மிக இயல்பாக கண்களிலிருந்து கண்ணீரை அன்பு வரவைக்கும்.

மேற்கத்திய நாடுகளில் கண்ணீர் வடிப்பதை பெரிய அளவில் அங்கீகரிப்பதில்லை. ஆனால், இந்தியாவில் தொன்மையான வாழ்க்கைமுறை கண்ணீரை ஒரு மனிதரின் நுட்பமான உள் தன்மையின் அடையாளமாகவே உணர்த்துகிறது.

பொதுவாகவே, ஒரு மனிதன் எது குறித்து அதிகம் சிந்திக்கிறானோ அதைச் சார்ந்தே அவன் அதிகம் பெறுகிறான். எனவே, ஆத்ம சாதனைகளால் அன்புநிலை சார்ந்து ஒரு மனிதனுடைய உணர்வுகள் தீவிரமடையும் போது, தன்னுடைய ஆற்றலை உணரமுடிகிறது.

அன்பு செய்தல் என்று எதுவுமே யில்லை. அன்பு நிகழ, அனுமதிக்க முடியுமே தவிர அன்பு செய்வது இயலாது. ஏனெனில் அன்பு என்பது ஒரு தன்மை. தியானம் எப்படியொரு தன்மையோ, ஆன்மீகம் எப்படியொரு தன்மையோ அதுபோல தான் அன்பும்.

ஒவ்வொரு மனிதரும் தன்வாழ்வில் ஏதாவது ஒரு விநாடியில் அன்பின் தன்மையை உணர்ந்திருப்பார். அது எல்லோருக்கும் ஒரு விநாடியாவது ஏற்பட்டிருக்கும். அந்த ஒரு விநாடியில் அவர் உணர்ந்த அன்பின் தன்மையை தக்கவைத்துக் கொள்ள அவருக்குத் தெரியவில்லை.

ஒருமனிதன் அன்பாகவும், ஆனந்தமாகவும் இருப்பதென்பது வாழ்வில் எப்போதோ ஏற்படும் அனுபவமல்ல. அதற்கான வாய்ப்பு விநாடிக்கு விநாடி இருக்கிறது. அதனை விழிப்புணர்வோடு அறிந்துகொள்கிற வாய்ப்பை தியானம் ஏற்படுத்துகிறது.


இத்தகைய தன்மையை மனிதருக்குள் ஏற்படுத்துவது கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் மூன்றிலுமே சாத்தியம்.

உள்நிலை பற்றிய விழிப்புணர்வின் மூலம், தன்னிடம் அன்பு, எப்போதோ ஏற்படும் உணர்வாகயிருக்கிறதா? அல்லது நிலையான தன்மையாய் இருக்கிறதா? என்பதை உணர முடியும்.

பற்றுதல்களையும், பலவீனங்களையும் அன்பு என்று தவறாகப் புரிந்து கொண்டு அவற்றின் பாதிப்பில் இருக்கும்வரை மனிதன் தன்னுடைய ஆற்றலை எவ்விதத்திலும் உணர முடியாது.

ஒவ்வொரு உயிரும் அன்பைத்தான் தேடுகிறது. சிலருக்கு அது பாதுகாப்பு ஏற்பாடாகவோ, பரஸ்பரம் நன்மை தரும் திட்டங்கள் போலவோ ஆகி விடாமல் உயிரின் இயல்பான தன்மை அன்பு என்பதை உணர்கிற போது மனிதன் எண்ணிப் பாராத அளவு பயன்பெறுகிறான்.

## மனிதர்களுக்கு அகங்காரம் ஒரு முகமூடி போலிருக்கிறது



விழிப்புணர்வு இல்லாத மனிதர்களைப் பொறுத்தவரை தன்னை மறந்த நிலைகளிலெல்லாம் அகங்காரம் இன்றித்தான் காணப்படுகிறார்கள். விளையாடும் போது தன்னை மறந்து விளையாடுகிறார்கள். கீழே விழுந்தால் உடனே அகங்காரம் எழுந்து விடுகிறது.

குளியலறையில் தன்னை மறந்து குளியலில் ஈடுபடும்போது அகங்காரம் இருப்பதில்லை. யாராவது கதவைத் தட்டினால் உடனே அகங்காரம் எழுகிறது. எனவே, மனிதர்களுக்கு அகங்காரம் ஒரு முகமூடி போல் இருக்கிறது.

அதனைக் கையில் வைத்திருக்கிற மனிதன் தன்னையும் அறியாமல் சில நேரங்களில் கீழே வைத்துவிடுகிறான். யாராவது வந்தால் உடனே அதனை மீண்டும் அணிந்து கொள்கிறான்.

தன்னை உணர்ந்த ஞானிகளுக்கு அகங்காரம் இருக்குமா? என்று பலர் என்னைக் கேட்டிருக்கிறார்கள்.

அகங்காரத்துக்குள்ளேயே சிக்கி உழன்று கொண்டிருக்கும் ஒருமனிதன் அந்த அகங்காரத்தையே தன் அடையாளம் என்று கருதிக்கொண்டேயிருக்கிறான். அது தன் அடையாளம் அல்ல என்கிற தெளிவு ஏற்படும்போது அதற்கு விழிப்புணர்வு என்று பெயர்.

அடிப்படையில் அகங்காரம் என்பது ஒரு பாதுகாப்பு ஏற்பாடு. அது பாதுகாப்பு உணர்வின் வெளிப்பாடு. (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# குப்பைத் தொட்டியில் உணவு தேடும் மனித வர்க்கம் உலக முதலாளித்துவம் அளித்துள்ள வாழ்க்கை இது

ஸ்பெயினில்- நல்ல உடை உடுத்திய அந்த இளம் பெண் காய் மற்றும் பழக்கடை மூடப்பட்ட பிறகு வெளியில் வைத்திருந்த கூடைகளை கிளறிக் கொண்டிருந்தார். கடையில் வேலை பார்ப்பவரோ என்று பார்த்தால், இல்லையாம். அன்றைய குப்பைகளிலிருந்து அடுத்த வேளை உணவுக்கு ஏதாவது கிடைக்குமா என்று தேடிக் கொண்டிருக்கிறார்.

சாப்பிட லாயக்கானவை என்று அவருக்கு தோன்றிய நாட்பட்ட உருளைக் கிழக்குகள் சிலவற்றை பொறுக்கி அருகில் இருக்கும் வண்டியில் வைத்திருக்கிறார். தன் பெயரை சொல்ல மறுத்துவிட்ட அவர், தேவையான அளவு பணம் இல்லை என்றால் இப்படித்தான் பிழைக்க முடியும் என்கிறார்.

33 வயதான அந்த பெண் அஞ்சல் துறையில் வேலை பார்த்தாராம். வேலையிழந்த பிறகு சிறிது காலத்துக்குப் பிறகு வேலையில்லாதவர்களுக்கான நிவாரணமும் நின்று போனது. இப்போது மாதம் 400 யூரோவில் வாழ்க்கை நடத்துகிறாராம். மின் இணைப்பும் தண்ணீர் வசதியும் துண்டிக்கப்படாத ஒரு கட்டடத்தில் சில நண்பர்களோடு தங்கிக் கொண்டு கடைகள் மூடப்பட்ட பிறகு குப்பைக் கூடைகளிலிருந்து கிடைப்பவற்றைத் தேட வருகிறார்.

50 சதவீதத்துக்கும் மேல் இளைஞர்கள் வேலை இல்லாமல் திண்டாடும் ஸ்பெயினில் பலர் இப்படித்தான் உயிர் வாழ்கின்றனர்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து செலவுகளை குறைக்கும் முயற்சியில் அரசு பலரை வேலை நீக்கம் செய்துள்ளது. சம்பளங்களையும் ஓய்வூதியங்களையும் குறைத்துவிட்டது. மக்கள் நலத் திட்டங்களை ரத்து செய்திருக்கிறது.

சமீபத்தில் பல பொருட்களுக்கு 3 சதவீத புள்ளிகளும் உணவு பொருட்களுக்கு 2 சதவீத புள்ளிகளும் மதிப்பு கூடுதல் வரியை அரசு உயர்த்தியது. மாநில அரசுகள் பள்ளிகளில் ஏழைகளுக்கான இலவச மதிய உணவுத் திட்டத்தை ரத்து செய்துள்ளன. பலர் குப்பைத் தொட்டிகளில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மூலம் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.

காரிடாஸ் என்ற தொண்டு நிறுவனத்தின் அறிக்கையின் படி ஸ்பெயினில் 22 சதவீத குடும்பத்தினர் வறுமையில் வாழ்கின்றனர். சுமார் 6 லட்சம் குடும்பங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை.

சமீபத்தில் மேட்ரிட் நகரில் ஒரு சூப்பர் மார்க்கெட் மூடும் நேரத்தில் குப்பைக் கூடைகளின் மீது பாய்வதற்காக ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. அதைப் பார்ப்பதற்கு வந்திருந்த பத்திரிகையாளர்களை பலர் கோபத்துடன் திட்டினர். குப்பைக் கூடைகளை லாரிகள் உடனடியாக எடுத்துச் சென்று விட்டதால் யாருக்கும் எதுவும் கிடைக்கவில்லை.

நகரத்துக்கு வெளியில் இருக்கும் மிகப் பெரிய காய்கறி மற்றும் பழங்களுக்கான மொத்த விற்பனை அங்காடியில், பெட்டிகள் லாரிகளில் ஏற்றப்படும் போது கீழே விழுந்து சாக்கடைக்குள் உருண்டு போகின்றனவற்றை திரட்டுவதற்கு ஆண்களும் பெண்களும் காத்திருக்கிறார்கள்.

அருகில் இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் பல்வேறு வயதான ஆண்களும் பெண்களும் கைகளில் பொருட்கள் நிரம்பிய பைகளுடன் நின்று கொண்டிருந்தனர். அந்த மொத்த விற்பனைசந்தையில்தனிநபர்களுக்குசில்லறை விற்பனை கிடையாது என்றாலும் சிலர் அந்த பொருட்களை வாங்கியதாக சொன்னார்கள்.

மற்றவர்கள் குப்பையிலிருந்து பொறுக்கியதை ஒத்துக்கொண்டனர். 67 வயதான விக்டர் விக்டோரியா என்ற பெரு நாட்டைச் சேர்ந்தவர் குப்பையில் போடப்படும் காய்கறிகளையும் பழங்களையும் தேடுவதற்கு வழக்கமாக வருவதாக சொன்னார். கட்டடத் தொழிலில் வேலை பார்த்து வந்த விக்டோரியா 2008 இல் வேலை இழந்தார். தனது மகளுடன் வசிக்கும் அவர் தினமும் இதைப்போல கிடைப்பவற்றை வீட்டுக்கு தனது பங்காக



கொண்டு போகிறார்.

இங்கு தொழில் செய்யும் மொத்த விற்பனையாளர்களுக்கு குப்பையில் பொறுக்குபவர்களை பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது. இவர்களுக்கு நிகழ்வதைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. இப்படி இருக்ககூடாது என்கிறார் மனு காலகோ என்ற வணிகர்.

தன் குழந்தைகளுடன் வந்த ஒரு அம்மா சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு குப்பைக் கூடைகளுக்குள் தேட ஆரம்பித்த அவமானமான காட்சியை பார்த்த பிறகு ஜிரோனா நகர அதிகாரி எட்வர்டோ பெர்லோசோ சூப்பர் மார்க்கெட் குப்பைக் கூடைகளுக்கு பூட்டு போடும் ஏற்பாட்டை செய்தார். இப்படி உணவை தேடுவது அவர்களின் கௌரவத்துக்கு குறைச்சல் என்கிறார் அவர்.

தெற்கு ஸ்பெயினில் நகர மேயர்களும் தொழிற்சங்க உறுப்பினர்களும் சேர்ந்து இரண்டு சூப்பர் மார்க்கெட்டுக்களை ராபின் ஹூட் பாணியில் கொள்ளை அடித்து ஏழைகளுக்கு விநியோகித்தனர். அதற்காக 12 ற்கும் மேற்பட்டவர்கள் மீது திருட்டு வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் அதற்காக வருத்தப்படவில்லை. அவர்களுக்கு பெருமளவு ஆதரவு இருக்கிறது. கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை எடுத்துக்கொடுப்பது குற்றம் என்றால் நான் குற்றவாளிதான் என்கிறார் விவசாய சங்கத்தைச் சேர்ந்த பிரான்சிஸ்கோ மோலேரோ.

வேலை இழந்த பலர் இது மாதிரி நிலைமை தங்களுக்கு ஏற்படும் என்று எதிர்பார்த்திராதவர்கள் என்கிறார் ஜிரோணாவின் சோஷலிஸ்ட் நகரசபை உறுப்பினர் பியாபோஷ்.

ஜிரோணாவில் காரிட்டாஸின் திட்டங்களை நிர்வகிக்கும் ராமோன் பார்னேரா, தருமமையங்களில் உணவு கேட்க வருவதை பலர் அவமானமாக நினைக்கிறார்கள் என்றார். உதவி பெறுபவர்களை கேவலப்படுத்தாத முறை வேண்டும்.

இப்படி தருமம் பெறுவது அவர்களுக்கு எளிதாக இல்லை என்றார் அவர்.

விநியோக மையத்தில் உணவு வாங்க வந்திருக்கும் 29 வயதான யுவான் என்ற பெயின்டர் இரண்டு ஆண்டுகள் வேலை இல்லாமல் இருக்கிறார். எனக்கு வேலை வேண்டும். இந்த தருமம் தேவை இல்லை என்றார் அவர்.

36 வயதான டோனி லோபேஸ் தனது நண்பர் மோனிகா வர்காஸுடன் இலவச உணவு வாங்க காத்திருக்கிறார். இரண்டு மாத வாடகை பாக்கி ஆனதால் குடியிருந்த வீட்டிலிருந்து சமீபத்தில் அவர்கள் வெளியேறினர்.

வாழ்நாள் முழுவதும் கௌரவமாக உழைத்தவர்கள் நாங்கள். வீட்டுக்காரர் கதவைத் தட்டி வாடகை கேட்கிறார். கொடுக்க முடியாததால் அவரிடம் சாவியை ஒப்படைத்துவிட்டு வெளியில் வந்த விட்டோம் என் றார்.

வளர்ந்த நாடுகளில் கூட உலக முதலாளித்துவம் மக்களுக்கு அளித்திருக்கும் வாழ்க்கை இத்தகையதுதான். இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் தமிழர்களின் உணர்வுகளின் பொருட்டே முடிபு

## தியாகுவின் உண்ணாவிரதத்தை கைவிட கோருகிறார் மன்மோகன்

(சென்னை)

**இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில், தமிழ் மக்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டே முடிவெடுப்பேன் என்று கூறியுள்ள இந்திய பிரதமர் மன்மோகன் சிங், தியாகுவின் உண்ணாவிரதத்தை கைவிடும் படியும் கோரிக்கை விடுத்துள்ளார்.**


தி.மு.க.தலைவர் மு.கருணாநிதிக்கு நேற்றுமுன்தினம் அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க.நாடாளுமன்றக் குழுத் தலைவர் ரி.ஆர்.பாலு இது தொடர்பாக நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி சார்பில் வலியுறுத்தினார்.

அத்துடன் இம் மாநாட்டைப் புறக்கணிக்க வலியுறுத்தி 12 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வரும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலர் தியாகுவின் உடல் நிலை மோசமடைந்து வருவது குறித்தும் மன்மோகன் சிங்கிடம், ரி.ஆர்.பாலு எடுத்துக் கூறினார்.

இதையடுத்து, தி.மு.க.தலைவர் மு.கருணாநிதிக்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் ஒன்றைக் கொடுத்தனுப்பியுள்ளார்.



அதில் அவர் கூறியிருப்பதாவது, பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து, தமிழ் மக்களினதும் உங்கள் கட்சியினதும் உணர்வுகள் உள்ளிட்ட எல்லாக் காரணிகளையும் கருத்தில் கொண்டே முடிவெடுக்கப்படும் என்று மன்மோகன்சிங் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தியாகுவின் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இதற்கிடையே உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோரி இந்தியப் பிரதமர் அளித்த கடிதத்தை, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தியாகுவிடம் தி.மு.க. அமைப்புச் செயலர் டி.கே.எஸ்.இளங்கோவன் கையளித்துள்ளார். (அ-2)

# ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக ஒன்றிணையுங்கள்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிய நாடுகள் ஒன்றிணைந்தால் ஏகாதிபத்தியவாதிகளை பின்னடையச் செய்யலாம். நாடுகளுக்குள் உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்படுத்துகின்ற ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக ஆசிய நாடுகள் ஒன்றுபட வேண்டும் என தேசிய மொழிகள் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.மாத்தறையில் அமைந்துள்ள கூட்டுறவு மத்திய நிலையத்தில் இடம்பெற்ற மக்கள் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது நாட்டில் இருந்த சில முன்னாள் தலைவர்கள் நவீன ஏகாதிபத்தியவாதிகளுக்கு கதவுகளை திறந்து விட்டனர்.

அதனால் எமது நாட்டு மக்களுக்கு பின்னடைவு ஏற்பட்டது. இதன் மூலம் மக்களுக்கு சிறந்த சலுகைகள், உரிமைகள் போன்ற அதிகமானவை இல்லாது போயின. அரச சொத்துக்கள், வளங்கள் மிகவும் மலிவான விலையில் விற்கப்பட்டன.

மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்டதே மஹிந்த சிந்தனையாகும். தேசிய சுதந்திரத்தை நோக்கி, ஏகாதிபத்தியவாதிகளின் சவால்களை முறியடித்தமை மிகப் பெரிய பணியாகும். அன்று நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி இந்த நாட்டில் மூன்று தசாப்தங்களாக இருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

என்றாலும் எமக்கு இன்னும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அதிகம் உள்ளன. அதற்கு பல்வேறு நாடுகள், சர்வதேச அமைப்புகள் தடையாகவுள்ளன. மேலும் தேசிய சிந்தனையை உருவாக்குவது மஹிந்த சிந்தனை மாத்திரமே என்றார். (அ-2)

# தண்டப்பண வருவாயை வைத்திருந்தே அரசாங்கம் இயங்குகின்றது-லால்காந்த

(கொழும்பு)

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் 1978 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசியல் யுகத்திற்கு இதுவரை எவராலும் முற்றுப்புள்ளி வைக்க முடியாமையானது கண்டிக்கத்தக்க விடயமாகுமென தொழிலாளர் சங்க மத்தியஸ்தானத்தின் தலைவர் கே.டி.லால்காந்த விமர்சித்துள்ளார்.

தாதியர் சங்கத்தின் 63 ஆவது சம்மேளன நிகழ்வு நேற்று முன்தினம் தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையின் பிரச்சினையை தீர்க்க வேண்டுமாயின் குறித்த துறைசார்ந்த அனைத்து ஊழியர் சங்கங்களும் ஒன்றிணைந்து தமக்கான பிரச்சினைகளை ஆட்சியாளர்களிடம் முன்வைத்து அதன் மூலம் தீர்ப்பை பெற்றுக்கொள்வதே சிறந்த வழிமுறையாகும் என சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையின் அரசியலானது 1978 ஆம் ஆண்டிலிருந்து பாரியதொரு திருப்புமுனைக்குள்ளானது. பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகள் மக்களின் அபிலாஷைகளுக்கு மாறாக செயற்பட தொடங்கியது.

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் உற்பத்தி, சுகாதார, கல்வி மற்றும் நலன்புரி சேவைகளை அரசின் சேவை என ஆட்சியாளர் கருதினர். ஆனால், 1978 ஆம் ஆண்டிலிருந்து இது தலைகீழாக மாறியது.

ஜனாதிபதி முறைமை திறந்த பொருளாதார கொள்கை போன்ற முறைமையிலான யுகத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்துள்ள நிலையில், அப்பலமிக்க அதிகார யுகத்தை இதுவரை எவராலும் முற்றுமுழுதாக ஒழிக்கமுடியாதுள்ளது.

தற்போது அரசாங்கத்திற்கு உற்பத்தி வருவாய்கள் எவையும் கிடைப்பதில்லை. மாறாக வரி மற்றும் தண்டப்பணத்தினுடாக கிடைக்கும் வருவாயை வைத்தே அரசாங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இச்செயற்பாட்டை மஹிந்தவின் அரசாங்கம் வெகு விரைவாக முன்னெடுக்கிறது.

எனவே இதற்காகவேண்டி ரணிலுடன் கூட்டுச் சேர்ந்து மஹிந்தவின் அரசைக் கவிழ்த்தாலும் அதே வழியிலேயே ரணிலும் செல்வார் என்பதில் ஐயமில்லை.

எனவே ஒற்றுமையாய் அனைத்து சங்கங்களும் ஒன்றிணைவதை கொண்டே வெற்றியீட்ட முடியும். கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நமது தொழிலாளர் சங்கத்தினால் மின் கட்டணத்திற்கு எதிராக ஏற்பாடு செய்யப்படிருந்த பணிப்பகிஷ்கரிப்பு மிகப்பெரும் வெற்றியீட்டியமை இவ் ஒற்றுமைச் செயற்பாட்டுக்கு சிறந்ததொரு உதாரணமாகும் என அவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# உரிய ஆவணங்களின்றி வெளிநாடு சென்றால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

உரிய ஆவணங்கள் எதுவுமின்றி வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வோர் உரிய ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமானது என்வும் குறிப்பிட்டுள்ளது.

விசா மற்றும் தொழில் அனுமதிப்பத்திரங்கள் போன்றன கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும். சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக செல்வோரை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் பணியாளர்களின் உரிமைகளை உறுதி செய்யவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் வெளிநாட்டு வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மாகாண மட்டத்தில் முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆங்கிலதினப் போட்டி, மன்னார் புனித செபஸ்தியார் பெண்கள் தேசியப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் யா/கொக்குவில் இந்து கல்லூரி உயர்தர கலைப் பிரிவு மாணவன் விஷ்வகுமார் விஷ்ணுஜன் ஆங்கிலத்தில் செய்தி அறிக்கை வாசிப்பில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (அ-7)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இரு வாரங்களில் அமுலாக வேண்டும்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் செய்யப்படும் பரிந்துரைகள் இரண்டு வாரங்களில் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அப்படி செய்யத் தவறின் உரிய நிறுவன பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழு விடுக்கும் பரிந்துரைகளை சில அரச நிறுவன பிரதானிகள் செயற்படுத்தாது புறக்கணிப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.


இது குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதெனவும் கூறப்படுகிறது.

அந்த முறைப்பாடுகள் குறித்து தனியாக விசாரணை மேற்கொள்ளப்படும் என ஆணைக்குழு கூறியுள்ளது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவர் பிரியந்த பெனாண்டோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்துள்ள இத்தீர்மானத்தை சட்ட மூலத்தில் உள்வாங்கிக் கொள்ளவென அது சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் குறித்த சட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கத்தில் நவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட நாவன்மை மற்றும் பண்ணிசைப் போட்டிகளுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு அண்மையில் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர் ஒருவருக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அத்தகையவர்களுக்குஉண்மைக்குப் புறம்பானதாயினும் நடைமுறைக்கு ஒவ்வாததாயினும் தாம் கொண்ட கொள்கையே உண்மையென்று முரண்டு பிடிக்கும் பிடிவாத குணம் பெருக்கெடுக்கும். சிலருக்கு எதிலும் உதாசீனமான புத்தியும் அசட்டையான மனோபாவமும் பிறக்கும். சிலர் கற்றது சிறியதாயினும் அதைக் கொண்டே கயிறு திரிப்பதில் வல்லமையும் காட்டுவார்கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் இந்த வையகத்து இயற்கை என்று நீங்கள் கருதினாலும் புதுமையைப் பற்றிப் பெரிதாகப் பேதினாலும் புரட்சி, சீர்திருத்தங்கள் என்றெல்லாம் நீங்கள் முழங்கினாலும் உள்ளூர் உங்களுக்குப் பழமையின் மீது ஒரு பிடிப்பு இருந்து கொண்டேயிருக்கும். பழங்காலத்திய விடயங்கள், பழைய நினைவுகள், பழைய கனவுகள் முதலானவற்றில் உங்கள் உள்ளுணர்வு அடிக்கடி சஞ்சரிக்கும். பழைய அனுபவங்கள், தித்திப்பானவையாக இருந்தாலும் கசப்பானவையாக இருந்தாலும் காரசாரமானவையாக இருந்தாலும் அல்லது கசப்பானவையாகவே இருந்தாலுங்கூட அவற்றை நினைத்துப் பார்ப்பதில் உங்களுக்கு ஒரு தனி ருசியும் உத்வேகமும் உண்டாகும்.

நீங்கள் நிகழ்காலத்தையே பெரிதாக நினைத்து நிகழ் காலத்தில் சஞ்சரித்துக் கொண்டே எதிர்காலத்தையம் இழுத்துப் பிடிக்க முயன்றாலும் கடந்த காலத்தில் கால் பாவியிருக்கும் உங்கள் எண்ணங்களின் பிடியை உங்களால் விட்டுவிட முடியாது! இவ்வாறு மூன்று காலங்களிலும் சஞ்சரிக்கக் கூடிய உங்கள் உணர்ச்சிரீதியான ஆற்றலை அறிவு ரீதியான ஆற்றலாகக் கற்றுக் கொண்டால் நீங்கள் திரிகால ஞானயாகி முக்காலத்திலும் உங்கள் மதிப்பை நிலைநாட்டிவிட முடியும்.

இந்தப் பழைமையுணர்ச்சியை ஒட்டிப் பரம்பரையாக வரும் பழைய மரபுகளுக்கு நீங்கள் மதிப்பும் கொடுப்பீர்கள். அதனால் ஒருவித வைதீக சித்தார்ந்த மனப் பான்மையும் உங்களையறியாமலே உங்கள் உள்ளுணர்வில் பொதிந்திருக்கும். நீங்கள் அசல் வைதீகராக இருந்தால் சமய சார்பான சம்பிரதாயச் சடங்குகளிலும் ஆசார அனுஷ்டானங்களிலும் விடாப்பிடியான மதிப்பு வைப்பீர்கள்.

மூடநம்பிக்கைகளைத் தகர்த்தெறிவோம்! சீர்த்திருத்தம்! புரட்சி! என்றெல்லாம் பேசினாலும் சிலர் சொந்த விடயங்களில் அந்தரங்கமாகப் பழைய சம்பிரதாயங்களையும் சமூகச் சடங்குகளையுமே கடைப்பிடிப்பார்கள். நீங்கள் வைதீகத்தையும் ஜாதி ஆசாரங்களையும் உண்மையிலே வெறுப்பவராக இருந்தால் உங்கள் குடும்பம், தாயகம், தனி இனம், தாய்மொழி முதலானவற்றில் ஏதாவது ஒன்றின் பழைய மரபையாவது பெரிதாக மதித்து அதை முன்னணிக்குக் கொண்டு வர முயல்வீர்கள். உதாரணமாக உங்களுக்குத் தமிழ்பற்று அதிகம் இருந்து மக்களிடையே உங்களுக்குச் செல்வாக்கும் இருந்தால் கடல் விழுங்கிய குமரிக் கண்டம் போன்ற பழம் பெரும் தமிழ் நாட்டின் வரலாற்றிலிருந்து ஏதாவது ஒரு பழைய வழக்கத்தை நீங்கள் புதிதாகக் கண்டுபிடித்து அதை நீங்கள் பெரிதாக மதித்து மற்றவர்களும் அதை மதித்து இந்தக் காலத்தில் போற்றிக் கொண்டாடும்படி செய்து விடுவீர்கள். பழைமையான வரலாற்று நாயகர்களுக்குச் சிலையெடுப்பீர்கள். வள்ளுவர் போன்ற பழம்பெரும் நூலாசிரியர்களுக்கு விழாநடத்தமுன்வருவீர்கள். ஆனால், பழைய சம்பவங்களையே அடிக்கடி நினைத்து மனம் புழுங்குவதோ, பழைய நினைவுகளின் உயர்ந்த நிலைகளை நினைத்து நினைத்து மகிழ்வதோ, தன் பழைய செயல்கள் அல்லது பெருமைகளை நினைத்துத் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதோ, அதோடு திருப்தியடைந்து சோம்பேறியாகி விடுவதோ சிலரின் சுபாவமாக இருக்கும். அத்தகைய இயல்பு உங்களை மேலோங்கி செயற்படத் தூண்டாதாகையால், அத்தகைய பழைமை என்ற நண்டு வளைக்குள்ளேயே பதுங்கிக் கிடக்காமல் அதை விட்டு வெளிக்கிளம்பி விட வேண்டும். உங்களில் பலர் எந்தக் குற்றத்தையும் மன்னிப்பீர்கள். ஆனால், எளிதில் மறக்க மாட்டீர்கள்!

ஜோதிடக் களம்

உங்களுக்கு ஞாபக சக்தியும் அதிகம் இருக்கும். மிகப் பழைய சம்பவங்களையோவிடயங்களையோ சிறு சிறு நுணுக்கங்களோடும் உங்களால் மறுபடியும் நினைவிற்குக் கொண்டு வந்து விட முடியும்! உங்கள் பழைய அனுபவங்களிலோ, செயல்களிலோ, தொழில் துறைகளிலோ மிகவும் முக்கியமானவற்றையெல்லாம் நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளமுடியும். அவற்றிலிருந்து நீங்கள் அந்த அடிப்படையின் மீதே ஏதாவது புதிய திட்டத்தைச் சிந்திக்கவும் உருவாக்கவும் செயலாக்கவும் உங்களால் முடியும்.

பழங்காலத்தில் புதையுண்டு போன கருத்துக்களை நீங்கள் மறுபடியும் வெளிக் கொணர்ந்து நடமாடச் செய்யவும் முடியும்! கணித சம்பந்தமாகவோ விஞ்ஞான சம்பந்தமாகவோ அல்லது வேறு எது சம்பந்தமாகவோ. நீங்கள் எப்போதோ எந்தக் காலத்திலோ எங்கோ படித்த நுட்பமான ஒரு சிறு விடயத்தை நீங்கள் நினைவுபடுத்திக் கொண்டு அதைப் புதிய கண்ணோட்டத்தில் பார்த்து அதன் அடிப்படையிலே அதை விரித்தும் வளர்த்தும் நீங்கள் புதிய கண்டு பிடிப்புகளையும் சாதனைகளையும் உருவாக்கி பௌதீகத்துறையிலோ விஞ்ஞானத்துறையிலோ சிறந்து விளங்க முடி யும். இந்த அரும் பெரும் ஆற் றலை நீங்கள் வளர்த்து அதைக் கொண்டு அதை நல்லுணர்வோடு நல்ல முறையில் சரியான சந்தர் ப்பமறிந்து பயன்படுத்தினால் நீங் கள் சிறந்து விளங்கவும் வெற்றிக் குரிய வாய்ப்புக்களை அடையவும் முடியும். கடக இராசிக்கு அதிபதி யான சந்திரன் இராசி மண்டலத்தை எவ்வளவு துரிதமாகச் சுற்றி வருகிறதோ எவ்வளவு விரைவாக தேய்ந்து மறைந்து வளர்ந்து நிறைந்து வளர்பிறையாக வும் தேய்பிறை யாகவும் பக்ஷ மாறுதல் அடைகிறதோ அது போலவே உங்களில் பலர் அடிக்கடி மாறுபடும் மனோ பாவங்கள் செயல்கள் , நடைமுறைக் கொள்கையுடையவர்களாக இருப்பதும் உண்டு. வாழ்க்கையில் வளர்பிறை தேய்பிறைக் காலங்களும் நிலை மாறுதல்களும் உண்டு.

சூரியன் நிற்கும் உங்கள் கடக இராசியின் ஆதிக்கக் கிரகம் மனித உடம்பில் மார்பையும் வயிற்றையும் கபாலத்தின் பிரம்மரந்திரப் பகுதியையும் ஆள்கிறது. அதனால் உங்களுக்கு மார்பிற்குள் உணர்ச்சிகள் மூட்டி வயிற்றுப் பிரச்சினையே பெரிதாக்த் தோன்றும் உங்கள் சொந்த வயிறாக இருந்தாலும் உங்கள் குடும்பமாக இருந்தாலும் நாட்டு மக்களாக இருந்தாலும் முக்கியமாக வயிற்றுப் பிரச்சினைகளிலே கவனம் செலுத்தி அதற்கு ஒரு தீர்வு காண விரும்புவீர்கள்.

நீங்கள் அழகையும் ரசிப்பவர். உங்களைச்சுற்றிலும் அழகானவை இருக்கவேண்டும் என விரும்புவீர்கள். மலர்கள், மங்கையர், குழந்தைகள், இயற்கைக் காட்சிகள் முதலானவை அழகுவளத்தோடு கொழிப்பதைக் கண்டு நீங்கள் மகிழ்வீர்கள். உங்கள் வீட்டை அழகாக வைத்துக்கொள்வதற்காக வும் அலங்கரிப்பதற்காகவும் உங் கள் சொந்தத் தேவைகளைக்கூட குறைத்துக் கொள்வீர்கள்.

சில சமயங்களில் விரக்தி யுணர்ச்சி வசப்பட்டு விட்டால் அவற்றில்கூட அலட்சியமாகவும் அக்கறையற்றும் இருந்து விடுவீர்கள். அழகைக்கூட விகாரமாக்கி விடுவீர்கள். உங்களில்சிலர்சுறுசுறுப்பில்லாமலும் சோம்பேறிகளாகவும் தோன்றலாம். (தொடரும்)

# ரயில் பயணத்தில் நவீனமுறையிலான பயணச்சீட்டை 2014 இல் அறிமுகம்

புகையிரதத்தில் பயணத்துக்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டுக்குப் பதிலாக அடுத்த வருடம் முதல் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பாதுகாப்பான பயணச்சீட்டு ஒன்றை அறிமுகப் படுத்த புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்பொழுது அமுலிலுள்ள பயணச்சிட்டை முறை பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அமுல் படுத்தப்பட்டதோடு இது 150 வருடங்களைக் கடந்த பழைமையானது என அறிய வரு கிறது.

அநேக நாடுகளில் நவீன பயணச்சிட்டை முறையே பயன்படுத்துவதாகத் தெரிவித்த புகையிரத வணிக அத்தியட்சகர் சிசிர குமார, இலங்கையில் அத்தகைய நவீன முறையைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போது அமுலிலுள்ள பற்றுச் சீட்டு ஊடாக மோசடி செய்யவும் பற்றுச்சீட்டு இன்றி பயணம் செய்யவும் முடிவதாக குறிப்பிட்ட அவர் பயணிகள் தன்னிச்சையாக பற்றுச்சீட்டு பெறக் கூடிய நவீன முறையொன்றை இலங்கையில் அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் பல்வேறு நாடுகளில் அமுல் படுத்தப்படும் பற்றுச்சீட்டு வழங்கும் முறைகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும் இலங்கைக்கு உகந்த முறையொன்றை தெரிவு செய்து முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


# ஹஜ் கடமையை நிறைவேற்ற 1.38 மில்லியன் மக்கள் பங்கேற்பு

இம்முறை ஹஜ் கடமையை நிறைவேற்ற 118 நாடுகளிலிருந்து சுமார் 1.38 மில்லியன் யாத்திரிகர் சவுதி அரேபியா வந்திருப்பதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சரும் ஹஜ் உயர்மட்டக் குழுவின் தலைவருமான இள வரசர் முஹம்மத் பின் தையாப் அறிவித் துள்ளார்.

இந்த யாத்திரிகர்கள் பாதுகாப்பாகவும் சிக்கலின்றியும் நாட்டை வந்தடைந்ததாக இரு புனித பள்ளிவாசல்களின் பொறுப்பாளரான மன்னர் அப்துல்லா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1,379,531வெளிநாட்டுஹஜ்யாத்திரிகர்களில் 55 வீதமானவர்கள் அதாவது 7 இலட்சத்து 52 ஆயிரத்து 424 ஆண்கள் என்றும் 6 இலட்சத்து 27 ஆயிரத்து 107 பேர் (45 வீதம்) பெண் யாத்திரிகர்கள் என்றும் இளவரசர் முஹம்மத் குறிப்பிட்டார். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் 3 இலட்சத்து 77 ஆயிரத்து 439 (21 வீதம்) வெளிநாட்டு யாத்திரிகர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

ஹஜ் கடமைக்காக 1.29 மில்லியன் யாத்திரிகர்கள் வான் வழியாகவும் 72 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரி கர்கள் கடல் வழியாகவும் 14 ஆயிரத்து 898 யாத்திரிகர்கள் தரைவழியாகவும் வந்திருப்பதாக இளவரசர் முஹம்மத் மேலும் கூறினார். (அ-2)



யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினரால் உலக குடியிருப்பு வாரத்தை முன்னிட்டு ஜனசெவன உபகார வீடமைப்பு கடன் திட்டத்தின் கீழ் நிரந்தர வருமானம் பெறும் 120 பயனாளிகளில் ஒருவருக்கு முதலாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டபோது....

# இலங்கையுடன் கல்வி உறவை வலுப்படுத்த ஈரான் விருப்பம்

இலங்கையுடன் கல்வி மற்றும் விஞ்ஞான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஈரான் பிரதிநிதிகள் இலங்கை பல்கலைக்கழகங்களின் வேந்தர்களுடன் கடந்த சனிக்கிழமை விசேட சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் ஆண்டுகளில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள விரும்புவதாக இந்த சந்திப்பின் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானிய விஞ்ஞானிகள் அண்மைய ஆண்டுகளில் பல்வேறுசாதனைகளை நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


# வாழ்வகத்தில் வெள்ளைப்பிரம்பு தினம்

சுன்னாகம் லயன்ஸ் கழகமும் வாழ்வகமும் இணைந்து நடத்தும் வெள்ளைப் பிரம்பு தினம் இன்று புதன்கிழமை வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்படி காலை 9 மணிக்கு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் ஆரம்பமாகும் விழிப்புணர்வு ஊர்வலம் சுன்னாகம் பஸ் நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து வாழ்வகத்தை அடைந்து வாழ்வக கேட்போர் கூடத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். இதில் லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் மகாதேவா , லயன்சீமாட்டி பூமாதேவி மகாதேவா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிப்பர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமான எதிர்க்கட்சி தேவை !



ஒரு காலத்தில், அதாவது, 1991 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரஷ்யா உள்ளிட்ட 15 நாடுகள் ஒன்றிணைந்த சோவியத் ஒன்றியம் என்ற பெயரிலான சமஷ்டி நாடொன்று இருந்தது. அது, எந்தவொரு விடயத்திலும் அமெரிக்காவிற்கு சவால் விடக்கூடிய அளவிற்கு பலமான வல்லரசாக இருந்தது. அமெரிக்கா வாயைத் திறந்தால், கௌவிக் கொள்ளக் கூடிய அளவுக்கு, அமெரிக்காவிற்கு அருகிலுள்ள -கியூபாவைத் தாக்க அமெரிக்கா முற்பட்ட பல சந்தர்ப்பங்களில் சோவியத் ஒன்றியத்தின் மிரட்டல் காரணமாக அமெரிக்கர் பின்வாங்க நேரிட்டது.

இதுதான் ஒரு பலமான எதிர்க் கட்சிக்கான சிறந்த உதாரணம் என லாம். இப்போது அந்த உலக எதிர்க் கட்சி இல்லை. சோவியத் ஒன்றியம் சிதறி 15 நாடுகளாக பிரிந்துவிட்டது. எனவே, அமெரிக்கா, வைத்தது தான் உலகில் சட்டம் என்ற நிலை இப்போது உருவாகியிருக்கிறது.

இலங்கையிலும் அந்த நிலை தான் உருவாகியிருக்கிறது. இங்கும் பலமான எதிர்க்கட்சியொன்றில்லை. இது பொதுவாக நாட்டை பாதித்தாலும், சிறுபான்மை மக்களை விசேடமாக பாதிக்கிறது.

1994 ஆம் ஆண்டு முதல் ஒரு சில தேர்தல்களில் பெற்ற வெற்றிகளைத் தவிர ஏனைய தேர்தல்களில் தோல்விக்குமேல் தோல்வி அடைந்து வருவதன் காரணமா கவே ஐ.தே.க.விற்குள் பிணக்குகள், பூசல்கள். உருவாகியிருக்கின்றன. இப்போதைக்கு அது, தலைமைத் துவத்தைப் பற்றிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

## .....வினை விதைத்தவன் வினை அறுப்பான்

அதாவது, தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்காவே கட்சியின் தோல்விக்கு காரணம் என கட்சிக்குள்ளேயே பலர் கூறி வருவதனாலேயே தற்போதைய உட்கட்சி நெருக்கடி உருவாகியிருக்கிறது. அவருக்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனும் அம்மாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசவை அல்லது கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கருஜயசூரியவை நியமிக்க வேண்டும் என்பதே அவர்களது வாதமாக இருக்கிறது. ஐ.தே.க.வின் பல சிறுபான்மையினத் தலைவர்கள் இந்த விடயத்தில் சற்று பதற்றமடைந்து இருப்பதாக தெரிகிறது.

கடந்த மாதம் மூன்று மாகாணங்களில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களை அடுத்து, ஐ.தே.க.வின் உட்கட்சிப் பூசல் தீவிர மடைந்திருக்கிறது. அதன் ஒரு கட்டத்தில் எதிர்வரும் தென் மாகாண சபைத் தேர்தலின் போது சஜித் பிரேமதாசவை தென் மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடவைக்க வேண்டும் என ஒரு கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது தம்மை தேசிய அரசியலில் இருந்து ஓரங்கட்டுவதற்கான சூழ்ச்சி எனக் கூறி சஜித் பிரேமதாச அதனை நிராகரித் துள்ளார்.

அவரது வாதத்தில் உண்மை இருந்தாலும் அது பெரியதோர் சவால் என்பதிலும் சந்தேகமே இல்லை. தென் மாகாணத்தை கட்சிக்காக வென்றால், அது எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது, கட்சியின் வேட்பாளராவதற்கு சிறந்ததோர் தலைமையாகும் என விக்கிரமசிங்கவிற்கு மிகவும் நெருக்கமான கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியிருந்தார்.

ஆனால், அவ்வாறு சஜித், தென் மாகாண முதலமைச்சரானாலும் அத்தநாயக்க ரணிலை விட, சஜித் ரணிலைவிட சஜித் பிரேமதாசவே ஜனாதிபதிபதவிக்கு பொருத்தமானவர் என்று ஏற்றுக்கொள்வார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இருந்தபோதிலும், இது நல்லதோர் வாதமாக இருக்கிறது.

அதேவேளை, இந்த வாதம் ரணில், கருஜயசூரிய போன்றோர்களுக்கும் பொருத்தமானதாகும்.

அவர்களும் மேல் மாகாண சபைக்கான தேர்தலின்போது, ஆளும் ஐ.ம.சு.கூட்டணியை தோற்கடித்துக் காட்டி ஜனாதிபதி வேட்பாளராவதற்கு தமக்கே தகுதியிருக்கிறது என உரிமை கூறலாம். ஏன் அத்தநாயக்கவும் கூட கடந்த மாதம் நடைபெற்ற மத்திய மாகாணசபைத் தேர்தலில்போட்டியிட்டு அம்மாகாண முதலமைச்சராகி தாமும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட தகுதியானவர் என்பதை நிரூபித்திருக்கலாம்.

ஆனால், இவர்கள் எவரும் இந்த சவாலை ஏற்கத் தயாரில்லை. அது தான் உண்மை. இவர்களில் மற்றவர்களைப் பார்க்கிலும் சிறுபான்மை மக்களுக்கு மிகவும்




நெருக்கமானவர் ரணில் விக்கிரமசிங்கவே. ஆனால், நிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் மேல் மாகாணத்தில் போட்டி யிட அவரும் விரும்பமாட்டார். அது முதலமைச்சர் பதவி அவரது அந்தஸ்திற்கு பொருத்தமானதல்ல என்பதற்காகவல்ல- தோல்வியடைவோம் என்ற பயத்தினாலேயே.

இரண்டு அரச தலைவர்களின் மகளாக இருந்தும் சந்திரிகா 1993 ஆம் ஆண்டு மேல் மாகாணசபை முதலமைச்சர் பதவிக்காக போட்டியிட்டே அரசியலில் மிக வேகமாக முன்னோக்கிச் சென்றார். இதில் அந்தஸ்த்து பிரச்சினையாக வில்லை.

ஒரு மாகாணத்திலாவது வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஐ.தே.க. தலைவர்களிடம் இல்லாவிட்டால் அடுத்து, பதவிக்கு வரப் போவது ஐ.தே.க.வே என்ற நம்பிக்கையை அவர்கள், மக்கள் மனதில் எவ்வாறு ஊட்ட முடியும்? அந்த நம்பிக்கை இருந்தால் மட்டுமே மக்கள் ஒரு கட்சிக்கு வாக்ளிப்பார்கள். மிகச் சிலரே வெற்றி, தோல்வி எதுவானாலும் ஒரு கட்சியின் கொள்கைக்காகவோ அல்லது அது தமது கட்சி என்ற உணர் வினாலோ வாக்களிப்பார்கள்.

இப்போது என்ன நடக்கிறது என்றால் ஐ.தே.க வெற்றி பெறும் என்ற நம்பிக்கை இல்லாததால்



பெரும்பாலான மக்கள் அக்கட்சிக்கு தேர்தல்களின் போது வாக்களிப்ப தில்லை. அதனால், ஐ.தே.க தலைவர் கள் நம்பிக்கையிழந்து இருக்கிறார் கள். நம்பிக்கையிழந்த நிலையில் அவர்கள், மக்களிடம் செல்கிறார்கள். மக்களுக்கும் ஐ.தே.க. வெற்றிபெறும் என்ற நம்பிக்கை இல்லாததால் பெரும்பாலான மக்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கே வாக்களிக்கிறார்கள். இது பைத்தியம் தீர்ந்தால் மணமாகும். மணமா னால் பைத்தியம் தீரும் என்பதைப் போன்ற நிலைமையாகும். இதைத் தான் விஷச் சூழல் என்பார்கள்.

இதனைப் புரிந்துகொள்ளாததால் தான் ஐ.தே.க. தலைவர்கள் சண்டைபிடித்துக்கொண்டு காலத்தை வீணாக்குகிறார்கள். இது தனி நபருடைய பிரச்சினை என்பதை விட ஐ.தே.க.வே 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மற்றும் விகிதாசார தேர்தல் முறைமையின் நேரடி விளைவாகும்.

மக்கள் பிரதானமாக கொள்கைகளுக்காக வாக்களிப்பதில்லை. மாறாக அலைவீசும் கட்சிக்கே வாக்களிக்கிறார்கள். தேர்தலின் போது இந்த அலையை உருவாக்கிக் கொள்ள நிறைவேற்று ஜனாதிபதி தமது கட்சிக்கு மட்டுமே இடமளிக்கிறார். பொலிஸ் இராணுவம் மற்றும் அரச இயந்திரம் ஆகியவை அவரது கையில் இருப்பதால் அவர் மற்றைய கட்சிகளுக்காக அலை உருவாக இடமளிப்பதில்லை.

இருந்த போதிலும் 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர்போல் தொகுதி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெற்றால் ஜனாதிபதிக்கு எதிரான கட்சிகளில் உள்ள சில தனி நபர்கள் தமது பண, சாதி மற்றும் குடும்ப செல்வாக்கு போன்றவற்றைப் பாவித்து ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரை தமது தொகுதியில் தோற்கடிக்கும் வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறானவர்கள் ஒன்றுகூடும் போது அங்கு பதவிக்கு வருவது ஒரு புறமிருக்க பலமான எதிர்க்கட்சியா வது உருவாகும்.

ஆனால், தற்போதைய தேர்தல் முறையின் கீழ் அவ்வாறு தனி நபர்களுக்காக அலைவீசுவதில்லை. கட்சிக்கே அலை வீசும். எனவே, தேர்தல்களின்போது, தாம் விரும்பும் வேட்பாளர்கள் ஏனைய கட்சிகளில் இருந்தாலும் அவர்கள், வெற்றி பெறுவர்கள் என்ற உத்தரவாதம் இல்லாத மக்கள் அனேகமாக அலை வீசும் கட்சிக்கே வாக்களிக்கிறார்கள்.

இது ஐ.தே.க., என்றும் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக, அன்றைய ஐ.தே.க. தலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தன 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்திய ஒரு பொறி முறையாகும். உண்மையிலேயே 1991 ஆம் ஆண்டு, முன்னாள் அமைச்சர்களான லலித் அத்துலக் முதலி மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோரின் தலைமையில், ஐ.தே.க. தலை வராகவிருந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிற்கு எதிராக கிளர்ச்சியொன்றை உருவாக்கியிருக்கா விட்டால், 1994 ஆம் ஆண்டு ஐ.தே.க., ஆட்சி கவிழ்ந் திருக்காது.

ஜே.ஆர்.ஜயவர்த்தன அன்றைய நிலையில் அரசியலமைப்பை திருத்தி ஐ.தே.க.விற்கு சாதகமாக நடந்துகொண்ட போதிலும் தமக்கு அடுத்ததாக பல தலைவர்களை வைத்திருந்த காரணத்தினால், அவருக்குப் பின்னர் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவு ஏற்படாமல் இருந்திருந்தால் 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐ.தே.க.வே இன்னமும் பதவியில் இருந்திருக்கும்.

ஐ.தே.க. என்றும் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக அன்று ஜயவர்த்தன, அரசியலமைப்பின் மூலம் அறிமுகப் படுத்திய பொறி முறையானதே, அவரது கட்சியான ஐ.தே.க. வையே இன்று வாட்டுகிறது. நாட்டைப் பற்றி சிந்திக்காமல் தமது குடும்பத்தை அல்லது கட்சியை மன தில் வைத்து நாட்டுக்கு அரசியலமைப்பொன்றை தயாரிப்பதால் மக்கள் நன்மையடையப்போவதில்லை.

அதேவேளை, அவ்வாறு தமது குடும்பத்தை அல்லது கட்சியை மனதில் வைத்து நாட்டுக்கு அரசியலமைப்பொன்றை தயாரித்தமையானது, சறுக்கினால், தமக்கும் படுகுழிதான் என்பதற்கு சிறந்த உதாரணமாகும். இன்றைய ஆட்சியாளர்கள், இன்று மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் இவ்வாறே அமையலாம்.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் கவர்ச்சியில்லாதவர் என்பனாலேயே ஐ.தே.க. தொடர்ந்து தோல்வியடைந்துவருகிறது என பலர் கூறுகிறார்கள். அவர் தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவைப் போன்று அரசியல் கவர்ச்சியுள்ளவர் அல்ல தான். அரசியல் கவர்ச்சியென்பது அதிகாரத்தைப் பெறுவதற்கு அவசியமாவதைப் போலவே, அதிகாரமும் அரசியல் கவர்ச்சிக்குத் தேவைப்படுகிறது. விடுதலைப்புலிகள் வடக்குத் தேர்தல் பகிஸ்கரிப்பில் ஈடுபடாவிட்டால் ரணில் விக்கிரமசிங்க 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவை தோற்கடித்திருப்பார் என்பதை எல் லோரும் ஏற்றுக்கொள் கிறார்கள்.

அவ்வாறு நடந்திருந்தால் நிறைவேற்று ஜனாதிபதி பதவியின் பலத்தைக்கொண்டு ரணில் விக்ர மசிங்க தம்மை மேலும் பலப்படுத்திக் கொண்டிருந்திருப்பார். அவ்வாறு நடைபெற்றிருந்தால் இப்போது மகிந்த ராஜபக்சவைப் பார்க்கிலும் விக்ரமசிங்கவே அரசியல் கவர்ச்சி மிக்கவராக இருந்திருப்பார்.

எனவே, இது தனிநபர் ஒருவருடைய பிரச்சினையல்ல. இது இந்த தேர்தல் முறைமையின் விளைவாகும். இதை உணர்ந்து ஐ.தே.க.தலைவர்கள் செயற்பட்டால் நாட்டுக்கு ஒரு பலமான எதிர்க்கட்சி, அமையமுடியும்.

-எம்.எஸ் எம். ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு பின்னரான யாழ்ப்பாணம் தொடர்பில் இருண்ட விமர்சனம்

## எக்கொனமிஸ்ட் ஆசிரியர் மீது பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டு

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகனான 12 வயதுடைய பாலச்சந்திரனை இலங்கைப் படைத்தரப்பினரே படுகொலை செய்ததாக புதுடில்லி கருத்தரங்கில் சுட்டிக்காட்டிய த எக்கொனமிஸ்ட் சஞ்சிகையின் தென்னாசியப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியர் அடம் ரொபேர்ட்ஸ் மீது பாதுகாப்பு அமைச்சு கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.**

புதுடில்லியில் கடந்த வாரம் நடத்திய ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அடம் ரொபேர்ட்ஸ் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது 12 வயதுடைய பாலச்சந்திரனை இலங்கைப் படையினரே படுகொலை செய்தனர். இப்போரின் போது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பிலான காணொளிக் காட்சிகளை இலங்கைப் படைத்தரப்பினர் வெளியிட்டிருக்காவிடின் போரின்முடிவில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் மற்றும் கைகள் பின்புறம் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்து வெளியுலகுக்கு தெரியவந்திருக்காது என்று அவர் தெரிவித்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் இடம்பெற்ற போர், முடிபுக்கு வந்த போதிலும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை எனவும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் அச்சத்துடனேயே வாழ்வதாகவும் அடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் இலங்கையின் கொலைக் களங்கள் என்ற ஆவணப்படத்தின் தொடரை வெளியிடும் சனல் 4 தொலைக்காட்சிக்கு நம்பகத்தன்மையைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக மேற்படி நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கை அடம் ரொபேர்ட்ஸ் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தல் இடம்பெற்ற பின்னரும் போருக்குப் பின்னரான யாழ்ப்பாணம் குறித்து ஒரு இருண்ட விம்பத்தை வெளிப்படுத்த அடம் ரொபேர்ட்ஸ் முயற்சிப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் குறிப்பிட்ட அதிகாரி குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதை ஜீரணிக்க முடியாத அவர்கள் போருக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளை குறைத்து மதிப்பிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கொழும்பில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் உச்சி மாநாட்டுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கத்தேய ஊடகங்கள் தீவிரப்படுத்தும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் குறிப்பிட்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அண்மையில் இலங்கைக்கு பயணம் செய்திருந்த போது அழைத்துச் சென்ற இந்திய ஊடகவியலாளர்களுடன் புதுடில்லியை தளமாகக் கொண்டு செயற்படும் பிரித்தானியாவைச் சேர்ந்த ஊடகவியலாளரான அடம் ரொபேர்ட்ஸ் யாழ்ப்பாணம் வருகை தந்ததாக தெரிய வருகின்றது. (அ-2)

# பரிந்துரைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை

## ஐ.நா.எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை விவகாரம் குறித்து மீளாய்வு அறிக்கை பரிந்துரைகள் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற போது ஐக்கிய நாடுகள் அமைப்பு பொதுமக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அமைப்பின் மனிதாபிமான மீட்புப் பணிகள் தொடர்பில் மீளாய்வு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையில் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தவிர்க்கப்பட வேண்டியவை குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதோடு மனித உரிமை விவகாரங்களின் போது எதிர்காலத்தில் இந்த அறிக்கையை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சைவ சமய அபிவிருத்தி கழகத்தின் ஏற்பாட்டில் செயன்முறை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடம்தோறும் நடத்திவரும் செயன்முறைப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகள் மத்தியபிரிவு, மேற்பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 300 போட்டியாளர்கள் தோற்றவுள்ளனர்.

கோலம்போடுதல் முற்பகல் 9 மணிக்கும், மாலைகட்டுதல் முற்பகல் 10.15 மணிக்கும் தோரணம் பின்னுதல் முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் போட்டிகளுக்குரிய பொருட்களை போட்டியாளர்களே கொண்டு வர வேண்டும் எனவும் சைவசமய அபிவிருத்திக் கழக உதவி பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (அ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## உகா

Botanical Name- Salvadora persica
Family- Salvadoraceae
Engl-Tooth brush tree
Sinh-Malihan

நிறைய கிளைகளையுடைய கரும் பச்சை நிறமான பெரிய மரமாகும். பெரும்பாலும் உலர் வலயங்களில் அதிகம் காணப்படும். கடற்கரையை அண்டிய பகுதியிலும் காணலாம். இதன் பட்டை சாம்பல் அல்லது சாம்பல் கலந்த வெண்நிறம், பட்டையில் ஆழமான வெடிப்புகள் காணப்படும். இலைகள் கோள வடிவம் அல்லது நீளகோள இலை, சதைப்



பிடிப்பாகவும் காணப்படும். பச்சை கலந்த வெண்ணிறப் பூக்கள். விதைகள் மூலம் தாவரத்தை இனவிருத்தி செய்யலாம். ஆனால், இதன் வளர்ச்சி மிக மெதுவானது. நாற்று மேடையில் விதை இட்டு 3 வருடங்களின் பின்னர்தான் நாற்றை பிடுங்கி நடலாம். இதன் மரக்கட்டை(Wood) மென்மையாகவும் வெள்ளை நிறமாகவும் காணப்படும். இதன் கிளைகள் மிகுதியாக பரவி முனையில் தொங்கிக் காணப்படும்.

### மருத்துவப் பயன்கள்

❖ இதன் இலைகளை சம்பல், துவை



யல் செய்து பயன்படுத்தலாம். இதன் குருத்துத் தண்டையும் இலையையும் சலாட் செய்தும் பயன்படுத்தலாம். இதனால் உடலுக்கு பலத்தை தருவதுடன் சுவாச நோய்களுக்கும் சிறந்ததாகக் காணப்படும்.

❖ உகா மரத்தின் இலையை சாறு பிழிந்து 15 மில்லிலீற்றர் அளவு எடுத்து அதில் சீனி 4 கிராம் கலந்து காலை, மாலை 3 நாட்கள் குடிக்க நாட்பட்ட இருமல் குணமாகும்.

❖ உகா மரத்தின் இலையைச் சாறு பிழிந்து 30 மில்லிலீற்றர் இரவில் குடித்தால் நாட்பட்ட மலச்சிக்கல் தீரும்.

❖ இதனுடைய பழங்களும் உண்ணக் கூடியவையே. அதாவது உடலுக்கு மிகவும் குளிர்ச்சியை தரக்கூடியது.

❖ இதன் பட்டையையும் பட்டையின் உட்புறத்தையும் பற்தூரிகை போன்று பயன்படுத்தலாம். மென்மையாகவும் இருக்கும். பல் ஈறுகளிலிருந்து வரும் இரத்தத்தை (gum bleading) குணப்படுத்தும்.

❖ இதன் இலையை அரைத்து சுத்தமான காரிக்கன் துணியில் அரைத்த இலையைப் பூசி (poultice) பிளாஸ்திரி மாதிரி தயாரித்து மூலரோகங்களுக்கும் கட்டிக்கும் வைக்க குணமாகும். இந்த Poultice ஐயே வாத ரோகங்களுக்கும் பயன்படுத்தலாம்.

❖ இதனுடைய நிழலில் உலர்த்திய இலைகளை பொடித்து 2 கிராம் அளவு எடுத்து 200 மில்லிலீற்றர் கொதித்தாறிய நீரில் கலக்கி சமிபாடின்மை, வயிற்றுப்பொருமல் ஆகியவற்றுக்கு கொடுக்கலாம்.

❖ இதனுடைய விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் உகா எண்ணெய் ஆனது' வாத நோய்க்கு வெளிபிரயோகமாகப் பயன்படும்.

❖ இதன் பழங்கள் கிடைக்கும் காலத்தில் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு பலத்தைக் கொடுக்கும் (Tonic)

❖ உகா மர இலைகள், வெள்ளரி விதை ஒவ்வொன்றும் 100 கிராம் எடுத்து நிழலில் உலர்த்தி பொடி செய்து தினமும் காலை, மாலை 2 வேளை 5 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வர வெள்ளை நோய் குறைந்து உடல் குளிர்ச்சி அடையும்.

❖ இதன் வேர்ப்பட்டை மிகவும் காரமாக இருக்கும். இப்பட்டைகளை சேகரித்து, இடித்து, பழுக்காத கொப்புளங்களில் வைத்துக் கட்ட வெந்து கொப்புளத்தை எழுப்பும்.

❖ இதன் காய்கள் வாசனையாகவும் ஒரு வித உறைப்பான சுவையாகவும் இருக்கும்.

❖ இதன் பழங்களை உபயோகிப்பதால் வயிற்றுக் கிருமிகளை போக்கி சீறுநீரை அதிகம் வெளிப்படுத்தும்.

❖ இதன் இளம் கிளைக்கொம்புகளையும் வேர்க்காம்பையும் பற்சுக்தியாகவும் பயன்படுத்தலாம். இதனால் பல் வெண்மையாகவும் திடமாகவும் வருவதுடன் பற்சூத்தையை நீக்கும்.

❖ இதன் விதையைச் சேகரித்து நிழலில் உலர்த்தி நன்கு கழுவி இடித்து 1-2 கிராம் காலை, மாலை கொடுக்க வாதநோய் நீங்கும்.

குறிப்பு: இது சாதாரணமாக எங்கும் கிடைக்காது. இது பொதுவாக முல்லைத்தீவு தண்ணீர் ஊற்று பிரதேசத்தில் காணப்படுகிறது.

❖ இதன் வேர்ப்பட்டை, மாவிலங்கம்



பட்டை ஆகியவற்றை ஆதியாகக் கொண்டு தயாரிக்கப்படும் வாயுமாவிலங்கம் எண்ணெய் வாத ரோகங்களுக்கு வெளிப்பிரயோகமாக பயன்படுகிறது.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

உகா பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் புக்கை வகையானது நாட்பட்ட நோய்களுக்கு புக்கை கட்ட பயன்படுகிறது.

❖ உடலிலும் மூட்டுக்களிலும் எற்படும் குத்துவலிகளுக்கு இதன் இலையை அவித்துக் குளிக்க உடல் வலி, மூட்டுவலி போன்றன குணமாகும்.

❖ இதன் பட்டை, கொத்தமல்லி, வேப்பம்பட்டை ஆகியவற்றை ஒரே அளவாக தண்ணீர் விட்டு 1/4 பங்காக காய்ச்சி 30 மில்லி லீற்றர் காலை, மாலை கொடுக்க நாட்பட்ட காய்ச்சல் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிலுள்ள இளைஞர் கழகங்களை விருத்தி செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் இளைஞர் கழகங்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் மாதங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதோடு கிராம புறங்களிலுள்ள இளைஞர்களை இணைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தலைமை அதிகாரி எஸ். கோகுலராஜா தெரிவித்துள்ளார்.**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட கிளையினால் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் என்பன தொடர்பாக விளக்கமளிக்கும் நோக்குடன் நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 516இளைஞர் கழகங்கள் இவ் வருடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த இளைஞர் கழகங்களின் செயற்பாடுகளை வினைத்திறன் உள்ளதாகவும் சர்வ தேச ரீதியில் இளைஞர்களை திறன் உள்ளவர்களாக வளர்த்தெடுக்கும் நோக்குடனும் எதிர்வரும் மாதங்களில் பல செயற்பாடுகளை முன்னெடுக்க எமது இளைஞர் சேவைகள் மன்றம் தயாராகி வருகின்றது. அத்தோடு இளைஞர் கழகங்களில் புதிதாக இளைஞர்களை இணைக்கவும் எமது மன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

ஆளணிப் பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை காரணமாக கடந்த காலத்தில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால், தற்போது இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு யாழ்.மாவட்டத்தில் தனியான இடம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த இடம் வாடகைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்ற போதிலும் ஓரளவுக்கு இட வசதிகள் கொண்டதாக இது உள்ளது. தற் பொழுது எமது மன்றம் இக்கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதனைவிட எமது அமைச்சின் ஊடாக 12 பட்டதாரி பயிலுநர்கள் இளைஞர் சேவைகள் மன்றத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு விரைவில் இவர்களுக்கு நிரந் தர நியமனத்தை வழங்குவதற்கான உறுதி மொழியினையும் அமைச்சர் கொடுத்துள் ளார்.

தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக பணிபுரிந்து வரும் இவர்கள் விரைவில் நேரடியாக இளைஞர் சேவைகள் மன்றத்துடன் இணைந்து பணிபுரியவுள்ளனர்.

எதிர்காலத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் செயற்பாடுகள் வினைத்திறனுள்ளதாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட அதிகாரிகளான திருமதி விநோதினி சிறிமோகன், சி. சண்முக வடிவேல், நிஸ்கோ முகாமையாளர் ப. பஞ்சலிங்கம், சம்மேளனத் தலைவர் ஏஸ். லக்சன் ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

## யாழ்ப்பாண மாநகர சபையின் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வார செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்ட நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் போது அதன் எல்லைக்குட்பட்ட 29 பாடசாலைகள், 28 அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள், 8 ஆயிரத்து 940 வீடுகள், பொது இடங்கள், ஏனைய நிலையங்கள் என்பன சோதனை இடப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபையின் பிரதம பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்இதுதொடர்பில்தெரிவிக்கையில், இந்நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் போது 649 நுளம்பு பெருகும் இடங்கள் அவதானிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டதுடன் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட 64 இடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும் 36 பேருக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடப்பட்டதுடன் 4இடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந் நடவடிக்கைகளின் அங்கமாக மாணவர்களின் விழிப்புணர்வு பேரணிகள் மற்றும்சிரமதான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு சகல பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும் விசேட கழிவகற்றல் வடிகான் சுத்திகரிப்பு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் தொடர இருக்கும் பருவகால மழையின் போது டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுவதால் மேற்படி சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-5)

## வடக்கு மாகாண கல்வியமைச்சரை யுனிசெப் பிரதிநிதிகள் சந்தித்தனர்



(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் மற்றும் அவுஸ்திரேலியா எயிட் நிறுவன பிரதிநிதிகளுக்கும் வடமாகாண கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜாவுக்குமான சந்திப்பொன்று நேற்று வடமாகாண கல்வி அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது, பாடசாலை பிள்ளை நேய செயற்பாடுகள், வடமாகாணத்தின் எதிர் காலத் தேவைகள் என்பன குறித்து ஆராயப்பட்டதோடு வடமாகாணத்தில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், பிரதி செயலாளர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதுயுனிசெவ்மற்றும்அவுஸ்திரேலிய எயிட் நிறுவன பிரதிநிதிகள் வடமாகாண கல்வி அமைச்சருக்கு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தனர். (அ-5)

## அவுஸ். சென்ற நாற்பது அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக சென்று கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் திருப்பி அனுப்பப்பட்ட இலங்கையர்கள் 40 பேரை பண்டார நாயக்காசர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு கடலிலிருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் அரசியல் தஞ்சம் கோரி சென்றுள்ளனர்.

இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவில் இருந்து விமானமூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த 40 பேரே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளவர்களாவர்.

இந்த 40 பேர்களில் 12 சிறுவர்கள், 25 பெண்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 பேரும் முல்லைத்தீவைச் சேர்ந்த 2 பேரும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தலா 20 இலட்சம் ரூபா செலுத்தி படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் சென்றடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைதான 40 பேரையும் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் விசாரணைகளின் நிறைவில் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## அரபு பாடசாலை 23 ஆண்டுகளின் பின்னர் அபி.சங்கத்திடம் ஒப்படைப்பு

23 வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று காணப்பட்ட மன்ப உல் உலூம் மதரசா எனும் மத்ரஸா அரபு பாடசாலை நேற்று முன்தினம் மாலை இஷா தொழுகையின் பின்னர் புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்காக மத்ரஸா அபிவிருத்தி சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மத்ரஸா புனரமைக்கப்பட முன்னர் முகீதன் ஜும்மா பள்ளிவாசலின் பராமரிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டது.

தற்போது பூரணமாக புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் வைபவ ரீதியாக பள்ளிவாசல் நிர்வாக பொருளாளர் எம்.எஸ்.எஸ்.சாகுல் ஹமீட்டினால் சங்க உறுப்பினர் எம்.ஜமாலிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மீன் ஐயூப், ஜம்மியத்துல் உலமா யாழ் மாவட்ட தலைவர் மௌலவி எம்.ஏ.அஸீஸ், செயலாளர் மௌலவி எம்.றொஸான், முஹம் மதியா பள்ளிவாசல் பெஷ் இமாம் மஹ்மூத், பலாகி பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர் எம்.தாஹிர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ-4)

## எயிட்ஸ் தொற்று அதிகரித்துள்ளது

(கொழும்பு)

நாட்டில் எயிட்ஸ் நோய்த் தொற்று பரவும் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணிகளைக் கண்டறிய விசேட குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் என்பனவற்றை அறியத் தருமாறு இந்தக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

தாயிடமிருந்து பிள்ளைக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று பரவக்கூடிய சாத்தியம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே கர்ப்பிணிப் பெண்களுக்கான இரத்த பரிசோதனைகளை நெறிப்படுத்த நடவடிக்கைக எடுக்கப்படவுள்ளது. (அ-2)



மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தகம், கிராம அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு மீனவர்களுடன் புயல் காற்றினால் ஏற்பட்ட அழிவு தொடர்பில் கலந்துரையாடிய போது... (படங்கள்:- உ.சாளின்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளப்பற்றாக்குறைகளுடன் தண்ணீரூற்று பொதுச் சந்தை

(முல்லைத்தீவு)

**முல்லை.மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தண்ணீரூற்று பொதுச்சந்தை பல்வேறுபட்ட வளப்பற்றாக் குறைகளுடன் இயங்கி வருவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

தண்ணீரூற்று மேற்கில் முல்லைத்தீவு முள்ளியவளை வீதிக்கு அருகில் 1940 ஆம் ஆண்டு காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப் பொதுச் சந்தை 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் இயங்கிவருகின்றது.



இச்சந்தை 6 பரப்புகாணியில் நிரந்தர கட்டடம் இன்றி போரினால் சேதமாக்கப்பட்ட கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

காலை 8 மணி முதல் இரவு 7.30 மணிவரை இச் சந்தையின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இச் சந்தையை குமாரபுரம், தண்ணிமுறிப்பு, மாமூலை, மதவளசிங்கன் குளம், புதறிகுடா, முள்ளியவளை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி, தண்ணீரூற்று கிழக்கு, மேற்கு, நீராவிப்பிட்டி கிழக்கு, மேற்கு, கணுக்கேணிகிழக்கு, மேற்கு, ஹிஜ்ராபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வாழும் 55 கிராமங்களை சேர்ந்த 5ஆயிரத்து245 குடும்பங்கள் பயன்படுத்துகின்றன.

இங்கு தளபாடசவதிகள், வாகன தரிப்பிடவசதி, ஆண்கள், பெண்களுக்கான தனித்தனி மலசலகூட வசதி என்பனவும் இல்லை.

மேலும் சந்தைக்கான பெயர் பலகையும் அமைக்கப்படாததோடு, சந்தைக்கு நிரந்தர காவலாளியும் நியமிக்கப்படவில்லை.

மேலும் சந்தையில் மின்சார வசதி, குப்பை தொட்டி வசதி என்பவற்றோடு சந்தைக்கு பாதுகாப்பான கதவுகளும் இல்லை. சந்தையைச் சூழ சுற்றுவேலி அமைக்கப்படாமையால் கால்நடைகள் சந்தைப் பகுதியை அசுத்தம் செய்கின்றன.

சந்தையின் தரை சீமெந்து இடப்படவில்லை. கழிவு நீர் வழிந்தோடக்கூடிய கழிவு நீர் வாய்க்கால் வசதியும் களஞ்சியசாலை வசதியும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் சகல வசதிகளுடன்சந்தையைபுனரமைத்து தரவேண்டுமென வியாபாரிகளும் நுகர்வோரும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 39,616 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முல்லைதீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டில் இருந்து இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை 39 ஆயிரத்து 616 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து808 உறுப்பினர்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து598 குடும்பங்களை சேர்ந்த 11ஆயிரத்து 258 உறுப்பி னர் களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2ஆயிரத்து701 குடும்பங்களைச் சேர்ந்த 8ஆயிரத்து 620 உறுப்பினர்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 5ஆயிரத்து517 குடும்பங்களை சேர்ந்த 17ஆயிரத்து998 உறுப்பினர்களும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 12ஆயிரத்து668 குடும்பங்களை சேர்ந்த 40ஆயிரத்து333 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 ஆயிரத்து 796 குடும்பங்களை சேர்ந்த 37ஆயிரத்து410 உறுப்பினர்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து336 குடும்பங்களை சேர்ந்த 11ஆயிரத்து189 உறுப்பினர்களும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வவுனியா நலன்புரி முகாம்களிலும் இருந்தவர்களே மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-267)

# காளான் வளர்ப்பு பயிற்சி


(குருமன்காடு)


வவுனியா விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களால் வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தில் நேற்று காளான் வளர்ப்பு பயிற்சி வகுப்பு வவுனியா மாவட்ட சர்வோதய நிலையத்தில் இணைப்பாளர் எஸ். உதயகுமாரனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது.




விவசாயத்திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் எஸ். யாமினியும் விவசாய போதனாசிரியர் கே. பிரிந்தாவும் வளவாளர்களாக கலந்துகொண்டு காளான் வளர்ப்பு முறை தொடர்பான செய்முறை விளக்கங்களை வழங்கினர்.

குறித்த பயிற்சி வகுப்பில் சர் வோதய சிரமதான சங்கத்தின் உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பை ஏற்படுத்திக் கொடுக் கும் நோக்கிலும், காளான் வளர்ப்பை கிராமமட்டத்தில் அதிகரிப்பதற்காகவும ஒழுங்கு செய்யப்பட்டதாக இணைப்பாளர் தெரிவித்தார். (ம-250)





வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் தயாரட்னாயக வன்னி கட்டளை தலைமையகத்தின் நுழைவாயிலை உத்தியோகபூர்வமாக திறந்து வைப்பதையும் இராணுவ அணிவகுப்பை ஏற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

### வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை பாடசாலை வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குண்டும் குழியுமான இவ்வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலையும் உள்ளது.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் பயணம் செய்கின்றனர்.

மழை காலத்தில் இவ்வீதியால் பயணிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையுள்ளது. எனவே மழை காலத்திற்கு முன் இவ்வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவ வேண்டுமென பயணிகளும் அப்பகுதிமக்களும்கோரிக்கைஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# நிரந்தர கட்டடம் இன்றி இயங்கும் முன்பள்ளி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் தேராவில் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள மதுசா முன்பள்ளி நிரந்தரக்கட்டடம் இன்றி வளப் பற்றாக் குறைகளுடன் இயங்குவதாக அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

முன்பள்ளிக்கென நிரந்தர காணி ஒன்று உள்ள போதிலும் நிரந்தர கட்டடம் இன்மையால் சேதமடைந்த தேராவில் பொதுநோக்கு மண்டபத்தில் 2011 ஆம் ஆண்டின் மீள்குடியேற்றத்துடன் இந்த முன்பள்ளி இயங்கி வருகின்றது.

இந்த முன்பள்ளியில் அடிப்படையான குடி தண்ணீர் வசதியில்லை. இதனால் சிறுவர் பெரும் சிரமமடைகின்றனர்.

மேலும் விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள் என்பன இல்லை.

சிறுவர்களின் கற்றல் உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு அலுமாரி வசதிகளும் இல்லை.

எனவே சகல வசதிகள் கொண்ட நிரந்தர கட்டடம் ஒன்றை இந்த முன்பள்ளிக்காக அமைத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோார் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# திறப்பு விழா

(ஆனையிறவு)

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்குட்பட்ட மீனவர்களின் ஓய்வு மண்டப திறப்பு விழா நாளை வியாழக்கிமை காலை 10 மணிக்கு சமாசத் தலைவர் கு.அருமைராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஸ்ரீநிவாசன், G.I.Z. நிறுவன சிரேஷ்ட ஆலோசகர் ஸ்தேபோன் ஒர் லைன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-264)

# வவுனியாவில் பசுப்பால் தட்டுப்பாடு

(குருமன்காடு)

வவுனியாவில் அண்மைக் காலமாக பசுப் பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் பசுப்பால் பெறுவதில் மக்கள் பல இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளனர்.

இதற்கு கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்காமையே காரணம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா நகர்ப் பகுதியில் இயங்கும் கூட்டுறவு பாற் சேவை நிலையத்திலும் குறைவாகவே பாலைப் பெறமுடிகின்றது.

இதுபற்றி வவுனியாவில் உள்ள சைவ உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கையில், தங்களுடைய கடைகளுக்கு தினமும் பசுப்பால் அருந்துபவர்கள் அநேகர் வருகின்ற நிலையில் பாற்பண்ணையில் இருந்து தமக்கு குறைவான பால் வழங்கப்படுவதால் எல்லோருக்கும் பாலை வழங்க முடியாதுள்ளதென தெரிவிக்கின்றனர்.

எனவே வவுனியாவில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டு மென அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள் ளனர். (ம-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைத்தீவு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 415 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் மல்லிகைத்தீவு கிராம சேவையாளர் பிரிவில் வாழும் 415 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படாமையால் வெயிலிலும் மழையிலுமாக அம்மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.**



போரினால் சேதமடைந்த 5 வீடுகள் மட்டும் புனரமைப்பதற்கென தெரிவாகியுள்ளன.

ஆயினும் புனரமைப்பதற்கான நிதி இன்னமும் உரியவர்களுக்கு கிடைக்கவில்லை.

ஏனைய 415 குடும்பங்களும் நிரந்தர வீடுகள் இன்றி அல்லலுறுகின்றன.

இவர்களில் 20 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் கூட இல்லை.

மேற்குறித்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 17 கிராமங்களில் 430 குடும்பங்கள் கடந்த 2012ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டன.

இந்நிலையில் 10 குடும்பங்களுக்கு மட்டுமே கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைத்து கொடுத்தது.

இக்குடும்பங்களில் 1-3 அங்கத்தவர்களை கொண்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட சிறுபிள்ளைகளை கொண்ட குடும்பங்களுக்கே நிரந்தர வீட்டுத் திட்டம் இன்னமும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே நிரந்தர வீடுகள் இல்லாதோருக்கு விரைவில் வீடுகளை அமைத்து கொடுக்க உரியவர்கள் முன்வரவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)


## கல்விக்கண்காட்சி

(குருமன்காடு)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியாவில கல்விக்கண்காட்சியும் புத்தக விற்பனையும் நாளை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை வவுனியா நகரசபை பழைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்குவலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு வலய கல்விப்பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியும் தரமேம்பாடும் உப பீடாதிபதி கு. சிதம்பரநாதன், நிதிநிர்வாக உப பீடாதிபதி க. சுவர்ணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக வவு னியா தெற்கு வலய நிர்வாக பிரதி கல்விப் பணிப் பாளர் திருமதி அன்னமலர், கல்வி அபிவிரு த்தி பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி என். மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-266-250)

## யுத்தத்தால் பாதிப்படைந்த பெண்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன



(குருமன்காடு)

யுத்தத்தினால் பாதிப் படைந்த பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக ரக் அவுட்றீச் மலேசியா நிறுவனம் வவுனியா கிராமிய பெண கள் அமைப்புடன் இணை ந்து உதவித்திட்டங் களை செய்து வருகின் றது.

இதன் ஒரு கட்டமாக வவுனியா மாவட்டத்தின் புதியவேலர்சின்னக்குளம், மகிழங்குளம், விளக்குவைத்தகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 100 பெண்களுக்கு சுகாதாரமான குடிநீரை பெற்றுக் கொள்ளும் முகமாக பில்டர்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 40 பெண்களுக்கு அவர்களின் சிறு தொழிலை விருத்தி செய்யும் முகமாக வட்டியில்லா கடன்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த ஜுலைமாதம் இப் பகுதி யில் 60 குடும்பங்களுக்கு வாழ்வாதார எழுச்சிக்காக வட்டியில்லா கடன்கள் வழங்கப்பட்டு அதன் மூலம் தோட்டச் செய்கை சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெயசித்ரா, ரக் அவுட்றீச மலேசியா நிறுவனத்தின் தலைவர் டாக்டர் செல்வமலர் ஜயாத்துரை, இந் நிறுவனத்தின் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த அமராவதி நவரத்தினம், முரளி ஜெகநாதன், சிறுவர் கல்வி அபிவிருத்தி இணைப் பாளர் மனோகரி ராஜகோபால், கிராமிய பெண்கள் அமைப்பின் திட்ட இணைப்பாளர் பிரியதர்சினி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-250)

## நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நினைவு நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நினைவு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தில் காலை 10மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி அகளங்கன் தலைமையில் சிவாஜி கணேசனின் திரைப்படங்கள் எனும் தலைப்பில் நடைபெறும்.

இந் நிகழ்வில் சிவாஜியின வரலாற்றுத் திரைப்படங்கள் எனும் தலைப்பில் கவிஞர் தனசீலனும் சிவாஜியின் புராண இதிகாசத் திரைப்படங்கள எனும் தலைப்பில் இலக்கியச் சுடர் ஜ. கதிர்காமசேகரனும் சிவாஜியின் சமூகத்திரைப்படங்கள எனும் தலைப்பில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ். வாஸனும் சிவாஜியின் திரைப்படங்களில் நாடகங்கள் எனும் தலைப்பில் நா. தியாகராஜாவும கருத்துரை வழங்கவுள்ளனர். (ம-266)




# மாசடைந்துவரும் வவுனியா குளம்; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

சூழல் மாசடைதல் தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் கொடுக்கப்பட்டாலும் அது தொடர்பான தெளிவின்மை தொடர்ந்தும் காணப்பட்டே வருகின்றது.

அந்த வகையில் சூழல் மாசடைவதில் முக்கிய பங்கு வகிப்பது பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையாகவும் உள்ளது.

இவ்வாறான ஓர் நிலையிலேயே வவுனியா மாவட்டத்தின் நகரப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 120 ஏக்கர் வயல் காணிகளை தன்னகத்தே கொண்டமைந்த நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான வவுனியா குளம் காணப்படுகின்றது.

இக் குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் உட்பட குளத்தின் நீர் பகுதியிலும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்ற பொருட்கள் அதிகளவில் காணப்படுவதனால் இப்பகுதி அழகற்று காணப்படுவதுடன் இக் குளத்தை நம்பி ஜீவனோபாயத்தை நடத்தும் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர் கொள்கின்றனர்.

வவுனியா நகரசபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பன நகரப்பகுதியில் இருந்து வரும் கழிவான நீரை சுத்திகரித்து குளத்தில் விடுவிக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள பகுதியை சூழ அழகுபடுத்தும் செயற்றிட்டத்தில் உள்வாங்கி எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இன்று இக் குளம் நகர்ப்பகுதியில் சூழல் மாசடைவதற்கு எடுத்துக்காட்டான பிரதேசமாக மாறியிருக்கின்றது.

சுத்திகரிப்பு நீர் தொட்டிகளினுள் நீண்ட காலமாக சுத்திகரிக்கப்படாது தேங்கி கிடக்கும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பொருட்களால் அப்பகுதி யில் துர்நாற்றம் வீசுவதுடன் இதனுள் காணப்படும் பொருட்கள் நீர்ப்பாசன குளத்திற்கு செல்வதனால் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் தமது விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக பிளாஸ்ரிக் பொருட்களினால் மீன்கள் இறப்பு வீதம் அதிகரித்துள்ளமையும் நீர்ப்பாசனம் செய்யும் போது வயல் நிலங்களுக்குள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் என்பன நீருடன் வருவதனாலும் விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு ஒவ்வாத நிலங்களாக மாறி வருவதாகவும் விவசாயிகளும் மீனவர்களும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இக் குளத்தின் அயலில் உள்ளவரகளால் இக் குளத்திற்குள் கொட்டப்படும் குப்பைகளால் அதிகளவில் இக் குளம் மாசடைந்து செல்வதாக தெரிவிக்கும் விவசாயிகள் இப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கவனம் செலுத்த வேணடும். மழை காலங்களில் டெங்கு நுளம்பு பெருகும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் சுகாதார வைத்திய அதிகாரி இவ் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதுடன் வவுனியா நீர்ப்பாசன திணைக களமும் வவுனியா நகரசபையும் தாம் எடுத்துக்கொண்ட இக் குளத்தை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-266)

## சிறுவர் உரிமைக்கான பேரணி இன்று

(முல்லைத்தீவு)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் பாதுகாப்புக்கும் உரிமைக்குமான பேரணி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி முல்லை. மாவட்ட செயலகத்தை வந்தடையவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

உலக கரிசனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இப்பேரணியில் முல்லை. மாவட்ட கரிசனம் நிறுவனத்தினால் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் 30 சிறுவர் கழகங்களில் உள்ள ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பேரணி முல்லை. மாவட்ட செயலகத்தை வந்தடைந்த பின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தீவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# துறைசார்ந்த நிபுணர் குழுக்களை அமையுங்கள்

வடக்கு மாகாண அரசு தனது பணிகளைப் பொறுப்பேற்று செயற்படத் தொடங்கியுள்ளது.

வடக்கு மாகாண அரசின் செயற்றிட்டங்களுக்கு அரசின் ஒத்துழைப்பு எங்ஙனம் இருக்குமென்ற ஐயுறவுகளை முன்வைப்பதோ! அன்றி அரசு மீது குற்றம்சாட்டிவிட்டு இயங்காமல் இருப்பதோ நியாயமானதல்ல.

இங்கு வடக்கு மாகாண சபை என்பது இரு நிலைப்பாதைகளில் பயணிக்க வேண்டிய தேவையுள்ளது.

அதில் ஒன்று, இணங்கிச் செல்லக்கூடிய இடங்களில் அரசுடன் இணங்கிச் சென்று மாகாண சபைக்குக் கிடைக்க வேண்டிய நிதி மூலதனங்களைப் பெற்றுக் கொள்ளுதல். மற்றையது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் போரினால் சிதைவடைந்த வடமாகாணத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பிலும் சர்வதேசத்திடம் இருந்து தாராளமான உதவிகளைப் பெறுதல்.

இந்த இரு நிலைப்பாதையில் திட்டமிட்டு பயணிக்கும்போது, வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி என்பதும் தமிழ் மக்களின் உரிமை என்பதும் சாத்தியமாகும்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பில் துறைசார்ந்த நிபுணர்கள் அடங்கிய குழுக்களை அமைப்பது கட்டாயமானதாகும்.

பொதுவில் கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சில கட்டுமானப் பணிகளில், நிபுணத்துவக் குழுக்களின் ஆலோசனைகளோ! அன்றி அவர்களின் பரிந்துரைகளோ! பெறப்படவில்லை.

இதன்காரணமாக செய்துமுடிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளில் எந்தப் பிரயோசனமும் ஏற்படாமல் போனதுடன் நிதி விரயங்களும் ஏற்பட்டன.

ஒரு அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கும்போது அங்கு நிபுணத்துவக் குழுக்களின் பரிந்துரைகளும் கட்டுமானப் பணி நடைபெறும் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அனுபவஸ்தர்களின் ஆலோசனையும் பெறப்படுவது அவசியமாகும்.

ஆனால் இப்போதெல்லாம் அதிகாரிகளின் முடிவுகளும் ஒப்பந்தகாரர்களின் சிக்கனங்களுமே கட்டுமானங்களைத் தீர்மானித்து விடுகின்றன.

இதனால் அந்தக் கட்டுமானப் பணிகளால் மக்கள் இடர்படுவதைத் தவிர வேறு எதுவும் நடப்பதாக இல்லை.

இதற்கு நல்ல உதாரணம், திருநெல்வேலி சந்தைக் கட்டடமும் அப்பகுதியை அண்மித்து ஆடியபாதம் வீதியில் அமைக்கப்பட்ட வடிகாலையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

திருநெல்வேலிச் சந்தை அமைப்பானது அந்தக் கட்டடத்தைக் கட்டிய மேசனும் கூலியாட்களும் சேர்ந்து வடிவமைத்தது போன்றதாகும்.

இவ்வாறானதொரு நிலை இனிமேல் வட பகுதியின் எந்த மூலை முடுக்கிலும் ஏற்பட்டு விடக்கூடாது.

எனவே வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் தத்தம் பொறுப்பாண்மைக்குட்பட்ட துறைகள் தொடர்பில் அதுசார்ந்த நிபுணத்துவக் குழுக்களை அமைத்தாக வேண்டும்.

அத்தகைய நிபுணத்துவக் குழுக்களின் பரிந்துரைகளை பொதுமக்களின் பார்வைக்காகவும் அவர்களின் கருத்துக்களுக்காகவும் பகிரங்கப்படுத்துவதும் அவசியம்.

எந்த முடிவுகளையும் திட்டமிடல்களையும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தல் என்பது ஒரு திட்டத்தை சரியான பாதையில் முன்னெடுப்பதற்கு மிகவும் அவசியமானது என்பதை இனிமேலாவது உணர்ந்து கொள்க.

# தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயங்களை செயற்படுத்த வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்ட வாக்குகளில் 75 வீதம் அரசாங்கத்துக்கு எதிரான வாக்குகள் என்பதனை எவரும் மறந்து விடக் கூடாது என மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் ரெலோ இயக்கத் தின் தேசிய அரசியல் துறைப் பொறுப்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தல் மிகப் பெரிய வெற்றியை மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு கொடுத்திருக்கின்றார்கள்.

இந்த வெற்றிக்கு பிரதான காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திறமை அல்லது கெட்டித்தனம் என்று கூறினால் அது பொருத்தமுடையதாகயிருக்காது என்பது எனது கருத்து.

இந்தத் தேர்தலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்ட வாக்குகளிலே சுமார் 75 வீதமான வாக்குகள் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் அளித்த வாக்குகளாகும்.

ஏனைய 25 வீதம் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த வாக்குகள்.

இவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை மற்றும் செயற்பாட்டுக்கு கிடைத்த வாக்குகள். அதுமட்டுமின்றி அதில் போட்டியிட்ட வேட்பாளர்களின் ஆதரவு வாக்குகளும் கூட எனலாம்.

எனவே இந்த விடயங்களை நாம் மனதில் நிறுத்தி செயற்படுவதோடு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே தமிழர் தாயகத்தில் சமஷ்டி அடிப்படையில் ஒரு பூரண சுயாட்சியை ஏற்படுத்துவது என்ற ஒரு கொள்கையும், இரண்டாவதாக சர்வதேச நீதி விசாரணை தேவை என்ற இரண்டு விடயங்களையும் செயற்படுத்தத்தான் தமிழ்மக்கள் எமக்கு மிகப்பெரிய ஆணையத் தந்துள்ளனர் என்பதையும் புரிந்து நாம் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும் வடக்கு முதலமைச்சர் முன்பாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளாத உறுப்பினர்கள் 9 பேரும் முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வதாக முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் ஏனைய 8 உறுப்பினர்களும் அந்தத் தீர்மானத்தைப் பின்பு கைவிட்டு விட்டனர்.

இருப்பினும் முள்ளிவாய்க்காலில் சத்தியப்பிரமாணம் எடுக்கும் தீர்மானத்தை கைவிடுவதாக எவரும் தனக்கு அறிவிக்காத காரணத்தால் தான் திட்டமிட்டபடி முள்ளிவாய்க்காலில் சத்தியப் பிரமாணத்தை செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வடக்கு மாகாணத்தில் நாம் இணைந்து பணியாற்றுவோம்

## வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபையின் ஆட்சி சிறப்பாக அமைவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவின் உத்தியோகபூர்வ பதவியேற்பு நிகழ்வு யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் அருட்பெரும் சொத்தாகவிருப்பது கல்விதான்.

அதனை புதிதாகப் பொறுப்பேற்றுள்ள எமது கல்வியமைச்சர் அபிவிருத்தி செய்வார் என எமக்கு நம்பிக்கையுண்டு.

நிர்வாக சேவையிலிருந்த எங்களுக்கு அரசியல் தலைவரோடு இணைந்து சேவையாற்றுகின்ற வாய்ப்பு கடந்த 20 வருடங்களாக எமக்குக் கிடைக்கவில்லை.

மாகாண சபையில் நாம் கடமையாற்றுகின்றபோதிலும்கூட எமக்கு அரசியல் தலைவரோடு சேவையாற்றுகின்ற வாய்ப்பு கிடைக்கவில்லை.

வடமாகாணத்திற்கான திட்டமிடலினை செய்கின்றபோது நிதர்சனம் கொள்கைச்சட்டம் என்பவற்றைக் கூறி வந்துள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் பொறுப்பேற்றுள்ள அரசியல் தலைவரினூடாக இவற்றைச் செய்யவேண்டும். கல்வியமைச்சராகப் பதவியேற்றுள்ளவர் எமக்குப் புதியவரல்ல. அவர் ஏற்கெனவே கல்விப் பணியில் ஈடுபட்டவர்.

வடமாகாணம் புதிய வரலாற்றில் இணைந்துள்ளது. அதில் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றுவோம் என்றார். (அ-4)

### பட்டினிச் சுட்டியில் இலங்கை 43 ஆவது இடத்தில்

2013 பட்டினிச் சுட்டியில் இலங்கை 43 ஆவது இடத்திலுள்ளதுடன் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா 2012 ஆம் ஆண்டு உலக பட்டினிச்சுட்டியில் 67 ஆம் இடத்திலிருந்து 2013 ஆம் ஆண்டு 63 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. எனினும் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 40 வீதமானோர் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சீன, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளுக்கு கீழேயே இந்தியா உள்ளது.

உலக பட்டினி சுட்டியில் சீனா பட்டினி மட்டத்தில் 6 ஆம் இடத்தில் உள்ளது. இலங்கை 43 ஆவது, பாகிஸ்தான் 57 ஆவது, பங்களாதேஷ் 58 ஆவது இடங்களை பெற்று கடுமையான பட்டினி மட்டத்திலிருப்பதை வெளிப்படுத்தியுள்ளன.

இதுவரை வெளியிடப்பட்டுள்ள பட்டினிச் சுட்டி அறிக்கையின்படி 19 நாடுகள் மிகவும் ஆபத்தான நிலையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

### ஆளுமை பற்றிய கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளி/மாங்குளம் மகா வித்தியாலய க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான சுவாமிவிவேகானந்தரின் ஆளுமை பற்றிய கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் பி. இரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம தலைவர் சித்ருபானந்தா சுவாமிகள் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## பால் போன்றது மனம்



❖ பணக்காரன் வீட்டு வேலைக்காரி அந்த வீட்டின் வேலைகளை செய்தாலும், அவளுடைய சிந்தனையெல்லாம் தன் வீட்டின் மீதே இருக்கும். எஜமானனின் குழந்தைகளை எல்லாம் தன் குழந்தையாகப் பாவித்தாலும், அக்குழந்தைகள் தனக்கு சொந்தமானவர்கள் அல்ல என்பதை அவள் உள்மனம் நன்கு அறிந்திருக்கும். அதுபோல, உலக வாழ்வில் ஈடுபட்டாலும் இறைவனே நமக்கு சொந்தமானவன் என்னும் உள்ள உறுதியோடு வாழ வேண்டும்.

❖ மனம் பால் போன்றது. அதனைத் தண்ணீராகிய உலகத்துடன் கலந்தால் இரண்டும் உடனே கலந்து விடும். முதலில் பாலைக் காய்ச்சி, உறை விட்டு தயிராக்கினால் கடைந்து விடலாம். கடைய கடைய தயிரிலிருந்து வெண்ணெய் உண்டாகும். வெண்ணெயை நீரில் வைத்தால் அது நீருடன் கலப்பதில்லை. மிதக்க தொடங்கி விடும். அதுபோல், பக்தியாகிய ஞானத்தை கடைந்தெடுத்தால் உலகமாகிய நீரில் மிதக்கலாம். உலகத்துடன் கலக்காமல் தனித்து நிற்கும் வலிமை உண்டாகும்.

❖ தெரிந்து சொன்னாலும், தெரியாமல் சொன்னாலும், தன்னறிவில் சொன்னாலும், அறியாமல் சொன்னாலும், எந்த நிலையில் சொன்னாலும் பகவான் நாமத்தைச் சொன்னதற்கான பலன் ஒருவனுக்கு நிச்சயம் உண்டு. அப்படி சொல்லும்போது மலையளவு பாவங்கள் குவிந்திருந்தாலும், பஞ்சுப்பொதி மீதிட்ட நெருப்பினை போல் எரிந்து சாம்பலாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினிடம் இருந்து அதிகம் கற்றுக்கொண்டேன்

## - வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான்



கிரிக்கெட்டின் அவதாரம் எனப் போற்றப்படும் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரிடமிருந்து ஏராளமாகக் கற்றுக்கொண்டதாக வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து பதான் தெரிவிக்கையில்,

தனது கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்தில் சச்சின் டெண்டுல்கர் ஏராளமாக உதவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பந்து வீசும் போதெல்லாம் எங்கே எவ்வாறு பந்து வீச வேண்டும் போன்ற விபரங்களை சச்சின் டெண்டுல்கர் தனக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பார் என இர்பான் தெரிவித்தார். பந்துவீச்சு மாத்திரமல்லாது துடுப்பாட்டம் பற்றியும் ஏராளமாகக் கற்றுக் கொணடுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வீரர்களின் அறையில் சச்சின் டெண்டுல்கரை 9 வருடங்கள் அருகிலிருந்து அவதானித்ததாகக் குறிப்பிட்ட இர்பான் பதான் அவர் எவ்வாறு மைதானத்திற்கு வெளியே நடந்து கொள்கிறார் போன்ற விடயங்களைக் கற்றுக் கொண்டதாகவும் இர்பான் பதான் குறிப்பிட்டார்.



குழந்தைப் பருவத்தில் சச்சின்



கிரிக்கெட்டின் அவதாரம் எனப் போற்றப்படும் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் 200 ஆவது டெஸ்ட் போட்டியோடு ஓய்வுபெறுவதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார்.

தனது சொந்த மைதானமான மும்பை வான்கடே விளையாட்டரங்கில் 200 ஆவது டெஸ்ட் விளையாட விரும்புவதாகவும், அவர் தெரிவித்திருந்தார்.

இதை ஏற்று அவரது 200ஆவது டெஸ்ட போட்டி மும்பையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது இந்திய கிரிக்கெட் சபை.

# ஆஷஷ் தொடரில் 'ஹொட் ஸ்பொட்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படமாட்டா

'ஹொட் ஸ்பொட்' தொழில்நுட்பம் குழப்பங்களை ஏற்படுத்துவதாகவும், இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடரில் ஹொட் ஸ்பொட் தொழிநுட்பம் பயன்படுத்தப்படாமையை வரவேற்பதாகவும் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸ் தெரிவித்துள்ளார்.


துடுப்பாட்ட வீரர்களின் துடுப்பில் பந்து பட்டதா, இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமான ஹொட் ஸ்பொட் தொழிநுட்பம், அண்மையில் இடம்பெற்ற ஆஷஷ் தொடரில் விமர்சனங்களைச் சந்தித்திருந்தது. இந்தத் தொடரில் துடுப்புக்களில் பந்து பட்ட தருணங்களிலும் ஹொட் ஸ்பொட் கமராக்கள் அவற்றைக் கண்டுபிடித்திருக்கவில்லை.

இந்நிலையில், அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள ஆஷஷ் தொடரில் தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றபோதிலும், ஹொட் ஸ்பொட் தொழிநுட்பம் பயன்படுத்தப்படாது என்ற முடிவை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் ஒளிபரப்பைகளான சனல் 9 நிறுவனம் எடுத்துள்ளது. இத்தொடர் முழுவதும் ஹொட் ஸ்பொட் கமெராக்களைப் பயன்படுத்துவதற்கு 250,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் செலவாகின்றன எனவும், அதனைச் செலுத்தத் தயாராக இல்லை எனவும் தெரிவித்தே சனல் 9 இந்த முடிவை எடுத்துள்ளது. இந்நிலையில், இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அன்ட்ரூ ஸ்ட்ரோஸ், ஹொட் ஸ்பொட் தொழில்நுட்பம் குழப்பத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

தொழிநுட்மென்பது 100 சதவீதம் தெளிவானதாகக் காணப்படவேண்டும் எனக் குறிப்பிட்ட அன்ட்ரூ ஸ்ட்ரோஸ், ஆனால் ஹொட் ஸ்பொட் தொழிநுட்பம் சில வேளைகளில் சரியாகச் செயற்படுவதாகவும், ஆனால் மறு வேளைகளில் அது சரியாகச் செயற்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# எமது வீரர்கள் சிறப்பாக விளையாடினர்

## - பங்களாதேஷ் தலைவர்



நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவுபெற்றமை குறித்து பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகர் ரஹிம் கருத்து வெளியிடுகையில்,

இந்தப் போட்டியில் தமது அணி வீரர்கள் சிறப்பாக செயற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

போட்டியின் முதல் இன்னிங்ஸ்சில் 501 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸ்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

நியூசிலாந்து அணிக்கெதிரான எந்தவொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் பங்களாதேஷ் அணி இதுவரை வெற்றிபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

# டென்மார்க் பூப்பந்தாட்ட பட்டத்தை தக்கவைப்பேன்

## - சாய்னா



டென்மார்க் திறந்த சுற்று பூப்பந்தாட்ட பட்டத்தை தக்க வைப்பேன் என்று சாய்னா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய பூப்பந்தாட்ட லீக் போட்டியில் எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியை சந்திக்காத சாய்னா நேவால் அதன் பின்னர் எந்த போட்டியிலும் விளையாடவில்லை. தற்போது ஓய்வெடுத்து வருகிறார். இந்த சீசன் சாய்னாவுக்கு அவ்வளவாக பெயர் சொல்லும் வகையில் அமையவில்லை. அவர் எந்தவொரு போட்டியிலும் அரை இறுதியை தாண்டவில்லை.

இந்த நிலையில் இன்று தொடங்கும் டென்மார்க் திறந்த பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சாய்னா நேவால் ஒரு மாத கால ஓய்வுக்கு பின்னர் மீண்டும் களம் காணுகிறார்.

இன்று நடைபெறும் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் உலக தர வரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் சாய்னா (இந்தியா), 58ஆம் நிலை வீராங்கனை ஸ்டெபானியை (பல்கேரியா) சந்திக்கிறார்.

இப்போட்டி குறித்து 23 வயதான சாய்னா நேவால் அளித்த பேட்டியில்,

'டென்மார்க் திறந்த சுற்றுப் போட்டியில் நான் நடப்பு சம்பியன். இந்த போட்டி கடினமாக இருக்கும். [illegible] வைக்கும் சவாலை எதிர்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். இந்திய பூப்பந்தாட்ட லீக் போட்டியில் நான் நல்ல நிலையில் இருந்தேன். எனது முழு திறமையை வெளிப் படுத்துவேன். டென்மார்க் போட்டியில் நன்றாக விளையாட முடியும் என்ற நம் பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தியன் பூப்பந்தாட்ட லீக் போட்டி முடிந்ததும் நான் களைப்பு அடைந்து விட்டேன். ஆனால் எனக்கு நல்ல ஓய்வு கிடைத்தது. கடினமாக பயிற்சி மேற் கொண்டு தற்போது நல்ல உடல் தகுதியுடன் களம் [illegible] என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா – அஸி இன்று பலப்பரீட்சை



இந்தியா-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்றாகும்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி ஒரேயொரு இருபது-20 போட்டி மற்றும் ஏழு 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடி வருகிறது.

இருபது-20 போட்டியை இந்திய அணி வென்றுள்ள நிலையில் முதலாவது ஒரு நாள் போட்டியை அவுஸ்திரேலிய அணி இந்திய அணியை வீழ்த்தி 72 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று மதியம் 1.30 மணிக்கு இந்தியாவின் ஜெயப்பூரில் இடம்பெறவுள்ளது.

இரண்டு அணிகளும் வெற்றி பெறுவதற்காக தீவிர வலைப் பயிற்சியில் ஈடுபட்டன.

# பிரித்தானிய இளவரசர் இலங்கைக்கு வருவார்

## உறுதி செய்தது தூதரகம்



பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ், இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில்,

இளவரசர் சார்ள்ஸ் எதிர்வரும் நவம்பர் மாதம் 14-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய மாநாட்டின் ஆரம்ப விழா மற்றும் இரவு விருந்திலும் இளவரசர் கலந்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய மகாராணியின் சார்பாகவே இளவரசர் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றார்.

2007-ம் ஆண்டு உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிலும் இளவரசர் சார்ள்ஸ், மகாராணியைப பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இந்தியாவுக்கு எதிரான தொடரை வெல்வோம் – பெய்லி

எனது அணி வீரர்களின் சிறப்பான செயல்பாட்டால் வெற்றி பெற்றோம், தொடரையும் வெல்வோம் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஜார்ஜ் பெய்லி கூறியுள்ளார்.

அவர் கூறுகையில், மிட்செல் ஜோன்ஸன், மெக்கே, ஃபால்க்னர், வோட்சன் ஆகியோர் சிறப்பாக பந்துவீசி விக்கெட்டுகளைச் சாய்த்தனர்.

இந்திய அணி வீரர்களின் துடுப்பாட்டம் வலுவாக இருந்தபோதும் எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்துவீசினர். அதுமட்டுமின்றி துடுப்பாட்டத்தில் எங்களது வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர். இதன்மூலம் தொடரை நாங்கள் வெல்ல முடியும் என்று தெரிந்துகொண்டோம்.

இதேபோன்று இனிவரும் போட்டிகளிலும் விளையாடி நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றார்.

## உதைபந்தாட்ட இன்றைய போட்டி

(கரவெட்டி)

வடமராட்சி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி சுடரொளி அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு உரும்பிராய் சென். மைக்கல் அணியை எதிர்த்து வதிரி பொம்மஸ் அணி மோதவுள்ளன. (24)

## மாவீரர் தின...

களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கும் இடையில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவது குறித்து இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிப்பதாக குறித்த சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ-11)

## 37 இந்...

வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களுடைய 7 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளன. மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாரிடமும், ஊர்காவற்றுறை பொலிஸாரிடமும் கையளிக்கப்பட்டுள்ளனர்.

உரிய விசாரணைகளின் பின்னர், இவர்கள் மன்னார் நீதிமன்றத்திலும், ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (எ-11)

# மரண அறிவித்தல்

# இளையதம்பி செல்வராசா



**(ஓய்வுபெற்ற அதிபர் - முன்னாள் யாழ்.மாவட்ட மினிபஸ் சங்கச் செயலாளர்)**

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பொலிகண்டி ஆழக்கிணற்றடியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை அதிபரும் யாழ்.மாவட்ட மினிபஸ் சங்க முன்னாள் செயலாளருமாகிய இளையதம்பி செல்வராசா அவர்கள் 14.10.2013 அன்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் - இலட்சுமி தம்பதியரின் அருமை மருமகனும், சிவதேவியின் அன்புக் கணவரும், ஆனந்தன் (ஓய்வுநிலை பிரதி அதிபர் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கருணாநிதி (ஓய்வுநிலை முகாமையாளர்-மக்கள் வங்கி) ஆகியோரின் சகோதரனும், ஸ்ரீரஞ்சனி (முகாமைத்துவ உதவியாளர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு), பரமராணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சிதம்பரேஸ்வரி, சிவமணி, சிதம்பரநாதன், சண்முகநாதன், மீனாம்பிகை, பவளராணி, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், Dr.வல்லிபுரம், தம்பிமுத்து (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் சகலனும், சோபிதா (லண்டன்), ஜீவினி (லண்டன்), லக்சுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், நேசலிங்கம் (லண்டன்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், அக்ஷயன், ஹனிஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2013) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவ இல்லம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

தகவல்: குடும்பத்தினர்

(சி-5198)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80 சிங்களக் குடும்...

யாழ்.நாவற்குழிப்பகுதியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கை தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோடு நேற்றையதினம் அனுராதபுரத்திலிருந்து சுமார் 80 குடும்பங்கள் வரவழைக்கப்பட்டு இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நில அளவைத்திணைக்கள அதிகாரிகளினால் காணிகள் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவம தொடர்பில் அறிந்து அப்பகுதிக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடனும் சிங்கள மக்கள் தகாத வார்த்தைப்பிரயோகங்களில் ஈடுபட்டு முரண்பட்டுக்கொண்டனர்.

இதனையடுத்து அங்கிருந்து அவர் வெளியேறினார். இருப்பினும அவரை பின்தொடர்ந்த சிங்கள மக்கள் தாக்குதல் மேற்கொள்ளும் விதத்திலும் செயற்பட்டனர்.

இந்தச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் பாலசந்திரன் கஜதீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் ஒருவரும் உடனிருந்தனர்.

நாவற்குழிப்பகுதியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றத்தை தடுப்பதற்கு தமிழர் தரப்பால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு சொந்தமான காணியில் அவர்களைக் குடியேற்றும் நடவடிக்கையினை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருவதனால் தடுத்து நிறுத்த முடியாத நிலை காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில் நேற்றையதினம் காலை அனுராதபுரத்திலிருந்து சுமார் 80 சிங்களக் குடும்பங்கள் வரவழைக்கப்பட்டு அப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளதோடு அவர்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு தாம் யாழ்ப்பாணத்தில் தான் பிறந்ததாகவும் தமது வாழ்விடங்களும் கடந்த கால யுத்தத்தின் போது தான் அழிவடைந்ததாகவும் குறித்த சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நாவற்குழிப்பகுதியில் சிங்களக்குடும்பங்கள் பல குடியேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## நாட்டுக்கு எதிராக செயற்...

சில ஆண்டுகளுக்கு முன்னர் நாம் பதுங்குகுழிகளில் இருக்கும்போது எமக்கு எதிராக நடவடிக்கையை சிலர் மேற்கொண்டதுடன் எமது இராணுவத்தினரை மிகவும் நோகடிக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர். அப்போதெல்லாம் எமது இராணுவத்தினர் மிகவும் அமைதியாகவும் பக்குவத்துடனும் செயற்பட்டனர் என்றார்.

அதன் பின்னர் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது எமது இராணுவத்தினர் மிகவும் சிறப்பாக செயற்பட்டு நாட்டுக்கான பணியை மேற்கொண்டு பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்தனர். இவ்வாறான நிலையில் நாம் எம்மிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளுக்கு சிறப்பான புனர்வாழ்வைக் கொடுத்து உதவினோம்.

அப்போதெல்லாம் நாம் எவ்வாறு புனர்வாழ்வை வழங்கப் போகின்றோம் எனப் பார்த்தனர். ஆனால் நாம் எவரும் எதிர்பாராத வகையில் மிகவும் சிறப்பான் முறையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அவர்களுக்கான புனர்வாழ்வை அளித்து அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைத்தோம் என்று குறிப்பிட்டார்.

எமது இராணுவத்தினர் மக்களுக்கான தமது சேவைகளை பல்வேறு வழிகளில் மேற்கொண்டு வந்தனர். மக்களுக்கு தேவையான பல உதவிகளையும் வழங்கினர். இதன் பின்னர் வட மாகாண சபை தேர்தலின்போது அரசாங்கம் தோல்வியடைந்ததை அடுத்து மககளுக்காக இராணுவத்தினர் பெரும் சேவைகளை செய்த போதிலும் அரசாங்கத்துக்கு தோல்வி ஏற்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்தனர்.

ஆனால் நாம் அரசியலுக்கு அப் பால் இந்த நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் வெற்றி கண்டுள்ளோம் என்பதில் பெருமைப் படுகின்றோம். அந்த வகையில் எமது சேவை தொடர்ந்தும் மக்களுக்காக இடம்பெறும்.

ஆனால் தேர்தலின் பின்னர் இராணுவததினரை சீண்டும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றது. அவ்வாறான நிலை ஏற்படடு எமது நாட்டை பிளவுபடுத்தும் நிலை ஏற்பட்டால் எமது இராணுவம் அதனை தடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, இராணுவத்தினருக்கு மத்தியிலும் சூழ்ச்சிகளை ஏற்படுத்த சிலர் முற்படுவர். எனவே அனைவரும வழிப்பாக செயற்பட வேண்டிய தேவை ஏற்படடுள்ளது. அத்துடன் எமது இராணுவத்தில் தேகாரோக்கியம் முக்கிய விடயமாகும். சிலர் பெருத்த வயிறுடன் காணப்படுகின்றனர். அவ்வாறானவர்கள் எமக்குள் இருந்தால் பதவி உயர்வுகள் கிடைக்காது. திடகாத்திரமானவர்க்ளாக உள்ளவர்களே சிறந்த நிலைக்குச் செல்ல முடியும்.

அத்துடன் எமது இராணுவத்தி னர் தமிழ், சிங்களம்,ஆங்கிலத்தை கற்க வேண்டும் என்பதுடன் எமது இராணுவத்தினர் சிறந்த கல்விமான்களாக உருவாக வேண்டும் என்பதே எனது விருப்பம் எனவும் இராணுவத் தளபதி ரத்நாயக்க மேலும் கூறினார். (எ-11)

## பிரதமர் மன்மோகன்...

டத்தினை அவர் மேற்கொண்டிருந்தார். உடல் நலிந்த நிலையில் அவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

திமுக நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன் உட்பட பலர் அவரை சந்தித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், திமுக தலைவர மு.கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருப்பதை சுட்டிக்காட்டி உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்ள தியாகுவும் மாலையில் பழ இரசம் அருந்தி தனது உண்ணா நிலை போராட்டத்தினை முடித்துக் கொண்டார். (எ-11)

## சீனக் குழுவின...

யல் இலங்கை அடைந்துள்ள வெற்றிகள் குறித்து பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுவடையக்கூடிய நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ ஜியன்ஹோ உட்பட சீனாவின் உயர் அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் மிலிந்த மொரகொட ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (எ-11)

## அத்துமீறிய சிங்கள...

தினம் சுமார் 80 சிங்களக் குடும்பங்கள் அனுராதபுரத்திலிருந்து வரவழைக்கப்பட்டு திடீரென குடியேற்றப்பட்டதாகவும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அவர்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்வதை தேசிய வீடமைப்பு அதிகார சபையும் அரசாங்கமும் உடனடியாக் நிறுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இனமோதலையும் முறுகலையும் ஏற்படுத்தக்கூடிய செயல் என்பதையும் தேசிய ஒற்றுமைக்கு இது பங்கம் ஏற்படுத்தக்கூடிய செயல் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


நீண்ட இடைவெளியின் பின்னர் ...

கனடா கல்வித் தகைமைகளிற்கேற்ப படிக்க, உழைக்க இத்தாலி சட்டரீதியாகச் செல்ல அரியவாய்ப்பு

கனடாவில் படிக்க, உழைக்க நிபந்தனைகள்

- சட்ட ரீதியான தேடல்களிற்கும் நடை முறைகளிற்கும் நீண்டகாலம் தேவைப்படும்.
- விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட சந்தர்ப்பங்கள் அதிகம்.
- எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டே உங்கள் சுய விபரக் கோவையுடன் (CV) நேரில் வரவும்.
- படிக்க, உழைக்க இலவச உணவு ரிக்கெற் இருப்பிடம்.
- குறிப்பு: கனடாவிற்கு எல்லா வயதினருக்கும் VISIT VISA பெறவும் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படும்.

இத்தாலி சட்டரீதியாகச் செல்ல வாய்ப்பு -

- ஒரு வருட விசா நீடிக்கப்படக் கூடியது.
- 100 வீத சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை.

(C-5184)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

உங்கள் தகுதிக்கு ஏற்ப படிக்க, உழைக்க வழிகாட்டுகின்றோம்

- அவுஸ்திரேலியா
- கனடா
- நியூசிலாந்து

விரைந்து வாருங்கள்

(C-5184)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
*Learn French The French Way*
*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

யார் AF இல் French படிக்க முடியும்?
திருமணம் மூலம் வெளிநாடு (France, Canada...) செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர், மாணவர்கள் & French கற்கவிரும்புவோர். இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா, மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்களும் படிக்கிறார்கள்.



- Speaking, writing, listening & reading திறமைகளில் தேர்ச்சிபெற..
- 6 மாத கற்கைநெறியின் (100 HOURS) முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டுகிறது. பின் தரமான CERTIFICATE ஐ பெறுங்கள்.
- 6 மாதத்தினை பூர்த்திசெய்யாதோர் கடிதம் ஒன்றை பெறலாம்.
- International Exams : DELF (A1,A2), களுக்கு AF இல் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.

*குறிப்பு: நீங்கள் French கற்கும்*
- ✓ *நிறுவனம் France அரசாங்கம் மற்றும் French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்டதா?*
- ✓ *நிறுவனத்தின் Exams, Certificates என்பன உண்மையில் பெறுமதியானதா? என்பவற்றைக் தெரிந்துகொள்வதால் உங்கள் பணத்தையும் நேரத்தையும் பாதுகாத்துக்கொள்ளலாம்.*
- ✓ எமது தலைமை நிறுவனம் Paris இலும் கிளைநிறுவனங்கள் இலங்கையில் COLOMBO, GALLE, KANDY, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. யாழில் French Embassy யின் அனுசரனையுடன் 1976 இல் இருந்து... உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises உள்ளன. (French Embassy website: www.ambafrance-lk.org).

புதிய வகுப்புகள் விரைவில் (சனி & ஞாயிறு)... இன்றே பதிவுசெய்யுங்கள்...
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 நேரில் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(4185)

மணல் விற்பனைக்கு
கட்டிட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.
4 1/2 ரக்டர் - 15,500 /-
தொடர்புகளுக்கு : தீபன்
0776766499, 0777590792
(C-5189)

விற்பனைக்குண்டு
NESCAFÉ (நெஸ்கபே) மெசின் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு : 0774683321
(C-5183)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம் (C-5185)

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

தேவை
லண்டனில் 72 வயதான ஆரோக்கியமான ஒருவரைக் கவனிப்பதற்கு ஒருவர் தேவை. பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தாதி விரும்பத்தக்கது
முழு விபரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்தில் விண்ணப்பிக்கவும்
தவம் - 68 Burges Road, London E6 2BH England
(4186)

வீடு விற்பனைக்கு
வெங்கடேசா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புதிய வீடு 1 ½ பரப்பு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0779597536
(4191)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.